வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 07.11.2024 வியாழக்கிழமை | இதழ் : 311 | பக்கங்கள் : 12

# அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் மீண்டும் தெரிவானார்

## ஐ. நாவில் இலங்கை மீதான அழுத்தம் குறையும்



வாஷிங்டன், நவம்பர் 07

**அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.**

தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப் தனது ஆதர வாளர்கள் மத்தியில் உரையாற்றிய போது, "எனது ஆட்சிக்காலம் அமெரிக்காவின் பொற்காலமாக இருக்கும்", என்று கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர் தல் நேற்று நடைபெற்றது. அமெ ரிக்க தேர்தல் விதிகளின் ஜனாதிபதித் தேர்தலில்

11

## பயங்கரவாத சட்டத்தில் கைதான மூவர் விடுதலை

வவுனியா, நவ. 07

பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்ட மூவரை குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பளித்து நேற்று புதன்கிழமை விடுதலை செய்தார் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன்.

கிளைமோர் குண்டுகளை வைத்திருந்தனர் என்ற குற் றச்சாட்டில் கடந்த 2019ஆம் ஆண்டு வவுனியா - சாளம் பைகுளத்தில் வைத்து கைது செய்யப்பட்ட மூவரே இவ் வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலையானவர்களில் இருவர் வவுனியா பெரிய புளியாளங்குளத்தை சேர்ந்தவர்கள்

11

## ஒற்றையாட்சிக்குள் தமிழரை முடக்க தமிழ் அரசு கட்சி சதி!

### கஜேந்திரகுமார் சாடல்

கிளிநொச்சி, நவ. 07

ஒற்றையாட்சிக்குள் மீண்டும் தமிழரை முடக்குவ தற்கே இலங்கை தமிழ் அரசுக் கட்சியினர் முயல்கின்ற னர். அவர்கள் அனைவரையும் தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும். வடக்கு, கிழக்கில் அறுதிப் பெரும்பான்மை யினராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரில் 10 பேரை பாராளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார்

11

## சமஷ்டி யாப்பு, ஐ. நா. தீர்மான நடைமுறைக்கு இடமில்லை!

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, நவம்பர் 07

சமஷ்டி அரசமைப்புக்கும் ஐ. நா. தீர்மானங்களை நடைமுறைப்படுத் துவதற்கும் எமது ஆட்சியில் ஒரு போதும் இடமளியோம் - இவ்வாறு கூறியுள்ளார் அரசாங்க பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத்.

அமைச்சரவை தீர்மானங் களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று புதன்கிழமை

11

## ட்ரம்புக்கு அநுரவும் வாழ்த்து!

கொழும்பு, நவ. 07

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய் யப்பட்ட டொனால்ட் ட்ரம் புக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வாழ்த்துத் தெரி வித்துள்ளார்.

அவர் தனது எக்ஸ் தளத்தில்,

11




## 50 கோடி ரூபாய் இழப்பீடு கோரி சுமந்திரனுக்கு கடிதம்!

கொழும்பு, நவ. 07

தமிழ் அரசுக் கட்சியின் எம். ஏ. சுமந் திரனிடம் 50 கோடி ரூபாய் நட்ட ஈடு கோரி முன்னாள் எம். பி. அங்கஜ னின் தந்தையான சதாசிவம் இராம நாதன் தனது சட்டத்தரணி ஊடாக கடிதம் அனுப்பி

11







## தபால் மூலம் வாக்களிப்பு; இன்றும் நாளையுமே இறுதி!

கொழும்பு, நவ. 07

பாராளுமன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு இன்றும் நாளையுமே இறுதித் தினங்களாகும்.

எதிர்வரும் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில், தபால் மூல வாக்களிப்பு கடந்த ஒக்ரோபர் 30ஆம் திகதி ஆரம்பமானது. கடந்த 1, 4ஆம் திகதி களிலும் தபால் மூல

11

## தோல் புற்றுநோய் நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 07

நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக தோல் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று தோல் நோய் தொடர்பான விசேட மருத்துவர் சிறீயானி சமரவீர தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணிய கத்தில் நேற்று புதன்கிழமை அவர்

11






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

"தமிழ் அரசு கட்சியின் மூளை என்று வர்ணிக்கப்பட்ட வி. என். நாகநாதன் கட்சியிலிருந்து வெளியேறி, சுயாட்சிக் கழகத்தை ஆரம்பித்து ஊர்காவற்றுறை தொகுதியில் போட்டியிட்டார்" என்று தமிழ் அரசின் பேச்சாளர் என்று அறியப்பட்ட முன்னாள் எம். பி. சுமந்திரன் கூறியிருந்தமை பற்றி நேற்று இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன்.

அதனைப் படித்துவிட்டு, லண்டனிலிருந்து ஒரு நண்பர் குறுந்தகவல் அனுப்பியிருந்தார். "அவர்தான் அரசியலுக்கு புதியவர், அவர் தனது அரசியல் கட்சி பற்றி அதன் வரலாறுகளை பற்றி கூறும் போது கொஞ்சம் என்றாலும் அறிந்து வைத்துக்கொண்டு பேச வேண்டும் என்று எழுதியிருந்தீர்கள் அது சரியானதுதான். ஆனால், அந்த பேட்டியை எடுத்த ஊடகவியலாளருமா வரலாறு தெரியாதவராக இருந்திருக்கிறார்?" என்று கேட்டிருந்தார்.

"அப்படி அந்த விடயத்தை தெரியாமல்தான் எழுதியிருப்பார் என்று நான் நினைக்கவில்லை. இவருக்கு ஒன்றும் தெரியாது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்காகவும் அவர் அதனை அப்படியே, அவர் சொன்ன மாதிரியே போட்டிருக்கலாம் அல்லவா?" என்று அவருக்கு பதில் அனுப்பினேன்.

இனி, தமிழ் அரசிலிருந்து இப்போது வெளியேறியவர்கள் எவரும் தமிழ் அரசின் மூளை என்று சொல்லக்கூடியவர்கள் அல்லர் என்றும் அந்தப் பேட்டியில் தெரிவிக்கப்பட்டிருந்தமை பற்றி பின்னர் பார்ப்போம் என்று நேற்று எழுதியிருந்தேன்.

தமிழ் அரசின் மூளை என்று வர்ணிக்கப்பட்ட காவலூர் வி. நவரத்தினம், தமிழ் அரசு கட்சி டட்லி சேனநாயக்காவின் அரசாங்கத்தில் இணைவது என்று முடிவெடுத்தபோது அதனை நிராகரித்து கட்சியிலிருந்து வெளியேறினார்.

அவ்வாறு வெளியேறிய நவரத்தினம், பின்னர் தமிழர் சுயாட்சிக் கழகம் என்ற பெயரில் கட்சியை ஆரம்பித்தமை பற்றி மாத்திரமே சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

உண்மைதான், அவர் சுயாட்சிக் கழகத்தை ஆரம்பித்தபோது அதன் துணைச்செயலாளராக இளம் சட்டத்தரணியான என். சிறிகாந்தா நவரத்தினத்துக்கு துணையாக பணியாற்றியமையும் பழைய சங்கதிகள். ஆனால், அவர் ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபது தேர்தலில், தமிழ் மக்களின் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கவேண்டும் என்றால், அது தமிழீழம் அமைவதால்தான் அடையமுடியும் என்று அறிவித்துக்கொண்டே தேர்தலில் போட்டியிட்டார்.

தமிழீழம்தான் ஒரே தீர்வு என்று அவர் அறிவித்தபோது, அதனை சாதாரண தமிழ் அரசுக்காரர்கள் மாத்திரமல்ல, தந்தை செல்வாகூட நிராகரித்ததுடன், இது தமிழர்களை பெரிய ஆபத்தில் வீழ்த்தப் போகிறது என்று எச்சரிக்கவும் செய்தார்.

1970ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலின்போது தீவுப் பகுதியில் புளியங்கூடல் என்னும் இடத்தில் தமிழ் அரசுக் கட்சி செயலாளர் அ. அமிர்தலிங்கத்துக்கும் தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் வி. நவரத்தினத்துக்கும் இடையே பொது மேடை விவாதம் ஒன்று நடைபெற்றது.

இந்த விவாதத்தின்போது "தனிநாடு கோரும் நவரத்தினத்துக்கு மூளைக்கோளாறு ஏற்பட்டுவிட்டது", என்றும் தனிநாட்டு கோரிக்கையை, ஒரு பைத்தியக்காரத்தனமான கோரிக்கையெனவும் அமிர்தலிங்கம் வர்ணித்து நவரத்தினத்தையும் அவரின் தனிநாட்டு கோரிக்கையையும் சாடினார்.

ஆனால், அதே அமிர்தலிங்கமும் தந்தை செல்வாவும்தான் எழுபத்தியேழில் தமிழீழம்தான் ஒரே தீர்வு என்று கூறிக்கொண்டு தமிழ் அரசு கட்சியையும் தமிழ் காங்கிரஸ் கட்சியையும் சேர்த்துக்கொண்டு தமிழர் விடுதலை கூட்டணியாக போட்டியிட்டனர்.

ஒரு சந்தர்ப்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்கூட, அவரின் அரசியல் குரு இந்த நவரத்தினம்தான் என்று கூறியிருக்கிறாரே தவிர, அவர் தந்தை செல்வாவுக்குக்கூட அத்தகைய பெருமையை வழங்கவில்லை. நவரத்தினம் தனது இறுதிக்காலத்தில் கனடாவில் பிள்ளைகளுடன் வாழ்ந்தபோது அவர் மரணிக்க, விடுதலைப் புலிகள் அவருக்கு நாட்டுப்பற்றாளர் விருது வழங்கி பெருமைப்படுத்தியிருந்தனர்.

கட்சியின் மூளை என்று வர்ணிக்கப்பட்ட நவரத்தினம், எது சரி என்று தான் கட்சியிலிருந்து வெளியேறியதும் கூறினாரோ அதனையே பின்னர் செல்வாவும் கட்சியும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாகி விட்டது.

"இன்று தமிழ் அரசு கட்சியிலிருந்து வெளியேறியவர்களில் அவ்வாறு மூளை என்று கூறக்கூடியவர்கள் யாருமில்லை" என்றும் அந்தப் பேட்டியில் சுமந்திரன் கூறியிருந்தார். தமிழ் அரசிலிருந்து அவர் கூறியதுபோல, நவரத்தினம் (அவர் நாகநாதன் என்று கூறியிருந்தாலும்) வெளியேறியபோதும் அவரையும் அவரின் கொள்கையையும் பைத்தியக்காரத்தனமானது என்றும் அவருக்கு மூளைக் கோளாறு என்றும் தான் கூறினார்கள். ஆனால் பின்னர், அவரை எதற்காக பைத்தியக் காரத்தனம் என்று சொன்னார்களோ அதனையே தாங்களும் செய்து தங்களின் மூளையையும் கேள்விக்கு உட்படுத்தியதுதான் இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.

இப்போது வெளியேறியவர்கள் மூளையை கேள்விக்கு உட்படுத்தியிருக்கிறார் சுமந்திரன். மூளை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கின்ற ஓர் உடல் உறுப்புத்தான். அதுவே இந்த உடலை முழுமையாக இயக்குகின்றது. ஓர் உடலுக்கு ஒரு மூளைதான் இருக்க முடியும். இரண்டு இருந்துவிட்டால் என்ன நடக்கும் என்று நினைத்துப் பார்க்கமுடியவில்லை. அதுபோலத்தான், தமிழ் அரசுக்கும் ஒரு மூளைதான் இருக்கமுடியும். அது சரியாக உடலை இயக்குகின்றதா இல்லையா என்பதை அந்த கட்சியின் நடவடிக்கைகளும் அதன் செயல்பாடுகளுமே நிரூபிக்கும்.

தமிழ் அரசு கட்சி இப்போது எத்தகைய நிலையில் இருக்கின்றது என்பதும் தமிழ் மக்களுக்கு தெரியாததல்ல. அதற்குக் காரணம் என்ன என்பதும் தெரியாததல்ல.

**- ஊர்க்குருவி.**

# பனை அபிவிருத்தி சபையின் தலைவருக்கு எதிராக போராட்டம்!



யாழ்ப்பாணம், நவ. 07

பனை அபிவிருத்தி சபையின் ஊழியர்கள் தொடர்பில் தரக்குறைவாக கருத்து தெரிவித்தமைக்காக, அந்த சபையின் புதிய தலைவருக்கு எதிராக நேற்று போராட்டம் நடத்தப்பட்டது.

கைதடியிலுள்ள பனை அபிவிருத்தி சபையின் தலைமையகம் முன்பாக சபையின் ஊழியர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "பனை அபிவிருத்தி சபை ஊழியர்கள் தண்டச் சோறுகளா?", "வடக்கு மாகாணத்தின் வினைத்திறனான ஆளுநரே எமக்கு தீர்வு தாரும்", "தகுந்த காரணமின்றி ஊழியர்களின் நிர்வாக பழிவாங்கல்களை உடனடியாக நிறுத்து", தேசிய மக்கள் சக்தி அரசே தகுதியற்ற புதிய தலைவர் நியமனத்தை உடனடியாக அரத்துச் செய்", உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர். அத்துடன், இந்தக் கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

பனை அபிவிருத்தி சபைக்கு அண்மையில் இரேனியஸ் செல்வின் தலைவராக நியமிக்கப்பட்டார். ஆனால், அவரை நீக்கி ஒரு வாரத்துக்குள்ளேயே புதிய தலைவராக விநாயகமூர்த்தி சகாதேவன் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-05)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் டெங்கு பரவும் அபாயம் அதிகம்!

கொழும்பு, நவ. 07

வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழையால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கும் நிலை காணப்படுகிறது என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட அந்த பிரிவின் வைத்தியர் லஹிரு கொடிதுவக்கு இதனை தெரிவித்துள்ளார்.

தற்போது நாடு முழுவதிலும் உள்ள 8 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

தற்போது நாடளாவிய ரீதியில் 42 ஆயிரத்து 730 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், வடகிழக்கு பருவ பெயர்ச்சி மழைகாரணமாக வடக்கு , கிழக்கு மாகாணங்களில் டெங்கு நோய் தொடர்பில் அவதானம் செலுத்தப்படுகிறது. இதற்கமைய, குறித்த பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# யாழ்ப்பாணம் கலாசார நிலைய பராமரிப்பு குறித்து உரையாடல்!

யாழ்ப்பாணம், நவ. 07

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தை பராமரித்தல் மற்றும் தொடர்ச்சியான நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல் வட மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்திய அரசின் நிதி உதவியுடன் கட்டப்பட்டு உள்ள யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தை பராமரித்தல் மற்றும் கலாசார நிகழ்வுகளை முன்னெடுத்தல் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதேவேளை கலை, கலாசார, நிகழ்வுகளை நடத்துதல், உரியவாறு ஒழுங்கு மைத்தல் தொடர்பிலும், சமூகத்தின் பாவனைக்கு விடுதல் மற்றும், கலாசார மத்திய நிலையத்தை தொடர்ந்து இயங்கு நிலையில் வைத்திருத்தல் தொடர்பிலும் கலாசார மத்திய நிலையத்தை உரிய திணைக்களங்களிடம் ஒப்படைத்தல் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், இந்திய துணைத்தூதர் சாய் முரளி, வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் பதில் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர், யாழ் மாநகர சபை ஆணையாளர், கலைத்துறை சார்ந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## விசேட பஜனை

யாழ்ப்பாணம், நவ. 07

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், நல்லூர் சிறீல சிறீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் கந்த சஷ்டி விரத கால விசேட பஜனை நடைபெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நவாலி கதிர்காம முருகன் பஜனை குழுவினரின் முருக நாம பஜனையும், கந்த ரோடை பிரம்மசிறீ கோபாலசர்மா குழுவினரின் திருப்புகழ் கச்சேரியும் நடைபெறவுள்ளன. (ஐ)

# 3 நாள் காய்ச்சலால் பெண் உயிரிழப்பு!

வடமராட்சி, நவ. 07

மூன்று நாட்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பெண்ணொருவர் உயிரிழந்தார்.

வடமராட்சி - துன்னாலை கிழக்கு, குடத்தனையை சேர்ந்த 68 வயதுடைய 6 பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்த சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

குறித்த பெண் கடந்த 3 ஆம் திகதி காய்ச்சலால் பீடிக்கப்பட்டார். 4ஆம் திகதி மந்திகை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட அவர், அன்றிரவே மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டார்.

எனினும், அவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவரின் மரணம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
07.11.2024 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 21

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## சுமந்திரனும் தமிழ்த் தேசியமும்

சட்டப்படி எவ்வாறாயினும், நடப்பின்படி இன்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் 'தலைவராக' இருக்கின்ற மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் செவ்வாயன்று வடமராட்சியில் செய்தியாளர்கள் மகாநாடொன்றில் வைத்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஒரு சவாலை விடுத்தார்.

தனது பெயரைத் தவிர்த்து முடியுமானால் தேர்தல் பிரசாரத்தை செய்து காட்டுங்கள் பார்க்கலாம் என்பதே அந்த சவால். அவர் அந்த சவாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை நோக்கி மாத்திரம் ஏன் விடுத்தார் என்று தெரியவில்லை. தேர்தலில் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி போட்டியிடும் சகல கட்சிகளுமே அவருக்கு எதிராக தீவிரமாக பிரசாரம் செய்கின்றன.

சுமந்திரன் அவ்வாறு ஒரு சவாலை விடுக்கிறார் என்றால் அந்த அளவுக்கு அவரையும் தமிழ் அரசு கட்சியையும் தேர்தலில் தங்களுக்கு பெரிய சவால் என்று பொன்னம்பலம் தரப்பினர் கருதுகிறார்களா?

சுமந்திரன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினராக பாராளுமன்ற பிரவேசம் செய்த நாட்களில் இருந்தே இனப் பிரச்னை தொடர்பிலான அவரின் அணுகுமுறையை கடுமையாக விமர்சித்து வந்தவர் பொன்னம்பலம். ஒரு கட்டத்தில் அவர் கூட்டமைப்பில் இருந்து விலகி தனிவழியில் அரசியல் பயணத்தை தொடருகிறார். கூட்டமைப்பில் இருந்த கட்சிகளுடன் அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் மற்றும் ஒற்றையாட்சி தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகவே தாங்கள் வெளியேறினரென அமெரிக்க தூதுவரிடம் பொன்னம்பலம் கடந்த வாரம் கூறியிருந்த அதேவேளை, பாராளுமன்ற தேர்தலில் ஆசன ஒதுக்கீட்டில் தோன்றிய முரண்பாடே அவரின் வெளியேற்றத்துக்குக் காரணம் என்று சுமந்திரன் வடமராட்சி செய்தியாளர்கள் மகாநாட்டில் கூறியிருக்கிறார். அது பழைய கதை என்பதால் இன்றைய சூழ்நிலையில் மக்களுக்கு அதில் பெரிதாக அக்கறை இருக்கும் என்று நம்புவதற்கில்லை.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் சார்பில் பலம் பொருந்திய அணியாக தங்களை பாராளுமன்றம் அனுப்புமாறு முக்கியமான சகல தமிழ்க் கட்சிகள் அல்லது கூட்டணிகள் மக்களிடம் வேண்டுகின்றன. ஆனால், தமிழ்க் கட்சிகளிடையில் காணப்படும் படுமோசமான பிளவுகள் காரணமாக பெரும் அதிருப்திக்கு உள்ளாகியிருக்கும் தமிழ் மக்கள் இந்தத் தடவை எவ்வாறு வாக்களிப்பார்கள் என்பது குறித்துத் திட்டவட்டமாக எதையும் கூறமுடியாமல் இருக்கிறது.

வடக்கில் குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதான போட்டி ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கும் தமிழ் அரசு கட்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலானதாக இருக்கும் என்பதே பொதுவான அபிப்பிராயமாக இருக்கிறது. மற்றைய தமிழ் கட்சிகள் எல்லாம் சிதறுப்பட்டிருக்கும் நிலையில் ஒருவிதமான கோட்பாட்டு பிடிவாதத்துடன் நிற்பது தங்களுக்கு கணிசமானளவுக்கு அனுகூலமாக அமையலாம் என்று பொன்னம்பலம் தரப்பு நம்புகிறதுபோன்று தெரிகிறது.

இது இவ்வாறிருக்க, அண்மைக்கால பாராளுமன்ற தேர்தல்களில் முன்னென்றும் இல்லாத அளவுக்கு வடக்கில் பல கட்சிகளாலும் சுற்றிவளைத்து கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகும் தனியோர் அரசியல்வாதியாக சுமந்திரன் விளங்குகிறார். இது அவருக்கு பலமா பலவீனமா என்பதை தேர்தல் முடிவுகளின் மூலம் மாத்திரமே தெரிந்து கொள்ளமுடியும்.

சுமந்திரன் தமிழர் அரசியலில் செல்வாக்குமிக்கவராக தலையெடுத்தால் தமிழ்த் தேசியத்துக்கு பெரும் பாதிப்பு என்றும் அந்தத் தேசியத்தை காப்பாற்ற வேண்டுமானால் அவரை தோற்கடிக்க வேண்டும் எனவும் உள்நாட்டில் பெரும்பாலான தமிழ் கட்சிகள் மாத்திரமல்ல, புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தில் உள்ள பல்வேறு குழுக்களும் கூறுகின்றன. தமிழ் அரசு கட்சியில் ஒரு பிரிவினரின் நிலைப்பாடும் அதுவே என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம்.

ஒரு கோணத்தில் நோக்கும்போது சுமந்திரனை சுற்றியதாகவே தமிழ்த் தேசிய அரசியல் களத்தில் வாதப் பிரதிவாதங்கள் அண்மைக்காலமாக அமைந்திருக்கின்றன. அதற்கு தமிழ்த் தேசியம் என்று தாங்கள் வியாக்கியானம் செய்யும் கோட்பாட்டுக்கு எதிராக சுமந்திரன் செயல்பட்டு வருகிறார் என்று அவருக்கு எதிரானவர்கள் கருதுவதுதான் காரணமா அல்லது வேறு ஆளுமை மோதல்தான் காரணமா என்பது முக்கியமான கேள்வி.

அதற்கான பதிலை அறிய வடக்கு மக்கள் நிச்சயம் விரும்புவார்கள். அதனால், தமிழ்த் தேசியத்துக்கு சுமந்திரன் செய்த பாதகங்களையும் தமிழ்த் தேசியத்தை தூய்மை கெடாமல் தொன்மை நலத்துடன் பாதுகாப்பதற்கு கடந்த பதினைந்து வருடங்களாக தாங்கள் செய்த காரியங்களையும் அவரை எதிர்த்து நிற்கும் தமிழ் அரசியல்வாதிகள் தெளிவாக விளக்கினால் பயனுடையதாக இருக்கும். தேர்தலுக்கு முதல் தமிழ் மக்களுக்கு தெளிவு வேண்டும்.

### வடமாகாண மரநடுகை மாதம்
### கார்த்திகை - 2024

"ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்."
- கரோலஸ் இலினேயஸ் (தாவர வகைப்பாட்டியலாளர்)



## கனியமணல் அகழ்வுக்கு கூர்ப்பு ஆவணம் மக்கள் எதிர்ப்பால் அதிகாரிகள் திரும்பினர்!

மன்னார், நவ. 07

மன்னார் ஓலைத்தொடுவாய் பிரதேசத்தில் கனியவள மணல் அகழ்வுக்கான கூர்ப்பு ஆவ ணம் தயாரிக்கும் நடவடிக்கையை தடுத்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஓலைதொடுவாய் வள நகர் பிரதேசத்தில் மக்களின் தனியார் காணிகளை அனுமதி யின்றி அபகரித்து நடை முறைப்படுத்தும் கனிய வள மணல் அகழ்வுக்கான கூர்ப்பு ஆவணம் தயாரிக்கும் நடவடிக்கைக்காக மன்னார் மற்றும் தென் பகுதிகளில் உள்ள சுமார் 20 வரையிலான திணைக்கள அதிகாரிகள் அந்தப் பகுதிக்கு நேற்று வருகை தந்தனர்.

இது தொடர்பில் அறிந்த அந்தக் கிராம மக்கள்,பொது அமைப்புகள் என நூற்றுக் கணக்கானவர்கள் திரண்டு பாதையை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அகற்ற பொலிஸார் அவ்விடத்துக்கு வந்தனர். இதைத் தொடர்ந்து மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே கடும் வாதப் பிரதிவாதம் ஏற்பட்டது.

இதையடுத்து, அதிகாரிகளை கடமையை செய்ய விடாது தடுத்தனர் என்ற குற்றச்சாட்டில் பொது மக்கள் மீது பொலிஸார் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

எனினும், அதிகாரிகள் திரும்பிச் சென்றதைத் தொடர்ந்து மக்கள் கலைந்து சென்றனர். (ஐ)

## விதி மீறிய 3 வேட்பாளர்களின் சாரதிகள் கைது செய்யப்பட்டனர்!

வவுனியா, நவ. 07

வவுனியாவில் தேர்தல் விதிமுறைகளை மீறிச் செயல்பட்ட குற்றச்சாட்டில் சத்தியலிங்கம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் உட்பட 3 வேட்பாளர்களின் வாகனங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. அத்துடன், அந்த வாகனங்களின் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வேட்பாளரின் உருவப்படம் மற்றும் ஸ்ரிக்கர் பொறித்த வாகனங்களில் வேட்பாளர்கள் பயணிக்க முடியும். வேட்பாளரின்றி அவருடைய உருவப்படம் அல்லது ஸ்ரிக்கர் பொறித்த வாகனங்கள் பயணிப்பதற்கு தேர்தல் திணைக்களம் தடை விதித்துள்ளது.

இந்த விதிமுறையை மீறி வவுனியாவில் வேட்பாளரின்றி வேட்பாளரின் ஸ்ரிக்கர்களுடன் நடமாடிய மூன்று வாகனங்களே வவுனியா பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. அத்துடன், அவற்றின் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர் ப. சத்தியலிங்கம், ஐக்கிய மக்கள் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் ரசிக்கா பிரியதர்சினி, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரின் படம் பொறித்த வாகனங்களே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

வாகனங்களின் சாரதிகளை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஐ)

## சரசாலை நூலகத்தின் பரிசளிப்பு விழா நடந்தது

தென்மராட்சி, நவ. 07


சாவகச்சேரி பிரதேச சபை சரசாலை நூலகத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதத்தின் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

யாழ். மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் சாவகச் சேரி பிரதேச சபை செயலாளர் கதிர்காமநாதன் சந்திரகுமார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில், கலை நிகழ்ச்சிகள், பத்திரிகை வாசகர் கௌரவிப்பு, ஓய்வுநிலை நூலகர்கள் கௌரவிப்பு, மாணவர்களுக்கான இலவச நூலக அங்கத்துவம் வழங்கல் என்பன நடைபெற்றன.

அத்துடன், வீட்டு நூலகப் போட்டியில் முதலாம் இடம்பெற்ற கதிர்காமத்தையன் ரஜனிகாந்தன், இரண்டாம் இடம்பெற்ற சசிகலா குகதாஸ், மூன்றாம் இடங்களைப் பெற்ற வசந்தா விக்னேஸ்வரன் , நா. தங்க வேல் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




**மேடம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதையோ இழந்ததை போல ஒருவித கவலைகள் வந்து செல்லும். நண்பர்கள், உறவினர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள்.

**மிதுனம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. புதியவர்கள் அறிமுகமாவார்கள். தாயார் ஆதரித்துப் பேசுவார். வெளியூரில் இருந்து நல்ல செய்தி வரும்.

**கடகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**சிம்மம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**கன்னி**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

**துலாம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். அரசு அனுகூலம் உண்டு. கோபம் குறையும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டு விட்டோமே என்று அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள்.

**மகரம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். அண்டை அயலார் சிலரின் செயல்பாடுகளால் கோபம் எரிச்சல் அடையலாம். கவனம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். எங்கு சென்றாலும் நல்ல வரவேற்பு கிடைக்கும்.சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**மீனம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர், நண்பர்களால் ஆதாயம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். பொறுப்புகளை ஏற்பீர்கள்.

# டிஜிற்றல் பொருளாதாரம் தொடர்பில் விழிப்பூட்டும் நிகழ்வு கலாசாலையில்








யாழ்ப்பாணம், நவ. 07

இலங்கையில் தற்போது பேசு பொருளாகியிருக்கும் டிஜிற்றல் பொருளாதாரம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றது.

கணிதநெறி ஆசிரிய மாணவன் செ. சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஹற்றன் நஷனல் வங்கியின் வட பிராந்திய கடன்துறை மேலாளர் ம. தயாகரன் அதிதிப் பேச்சாளராகக் கலந்து கொண்டு டிஜிற்றல் பொருளாதாரம் பற்றி சிறப்புரை ஆற்றினார். இவருக்கான அறிமுகவுரையை கலாசாலை விரிவுரையாளர் கு. பாலஷண்முகன் ஆற்றினார். விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவி வீரராகவன் மயாதேவி கல்வித் துறையில் தொழினுட்பப் பயன்பாடுகள் என்ற பொருளில் ஆசிரியமாணவர் உரையை வழங்கினார்.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரையாற்றினார். அதிதிப் பேச்சாளர் ம. தயாகரன் கலாசாலை முகாமைத்துவக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டார். (அ)

# மின்சார சேவையை வழங்குவதற்கான பொறிமுறை உருவாக்குவதற்கு ஆலோசனை கேட்கும் செயலமர்வு



யாழ்ப்பாணம், நவ. 07

அரச காணி உட்பட ஏதேனும் காணிக்குள் குடியிருக்கும் நுகர்வோருக்கு மின்சார சேவையினை வழங்கும் பொருட்டு மின்சார சேவையினை வழங்குநருக்கு பொறிமுறை ஒன்றினை உருவாக்குவதற்கான ஆலோசனை கேட்கும் செயலமர்வு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எல். இளங்கோவன் தலைமையில் நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இங்கு கருத்துத் தெரிவித்த மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மீள்குடியேற்ற பிரதேசத்தில் காணிகளை அடையாளம் கண்டு மின்சார இணைப்பை வழங்குவதில் சில பிரச்னைகள் காணப்படுவதாக குறிப்பிட்டதுடன், ஏனைய மாவட்டங்கள் போல் காணி உரிமம் தொடர்பில் பிரச்சனைகள் இருந்தாலும் குடியிருப்பாளர்களுக்கான மின்சார இணைப்பை வழங்குவதில் ஒத்துழைப்புக்களை நல்கிவரும் இலங்கை மின்சார சபைக்கு தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் அரச காணி உட்பட ஏதேனும் காணிக்குள் குடியிருக்கும் நுகர்வோருக்கு மின்சார சேவையினை வழங்கும் பொருட்டு மின்சார சேவையினை வழங்குநருக்கு பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கான பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்களின் ஆலோசனைகளை கேட்டறியும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு இச் செயலமர்வு நடைபெற்றது

இச்செயலமர்வில் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவின் பணிப்பாளர் ஜசந்தறது விதான, பிரதிப்பணிப்பாளர் றொசான் வீரசூரிய, வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ். பிரணவநாதன், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர்கள், இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் உட்பட துறைசார் அதிகாரிகளும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# பருத்தித்துறை கலட்டி றோ.க.த.கவில் மாணவர்கள் பாராளுமன்ற அமர்வு

யாழ்ப்பாணம், நவ. 07

பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கவலன் பாடசாலையின் மாணவர் பாராளுமன்ற அமர்வு, பாடசாலை அதிபரும், மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகமுமான அரவிந்தன் தலைமையில் நேற்று முன் தினம் காலை 10:30 மணியளவில் இடம்பெற்றது.

விருந்தினர்கள், பாண்ட் இசை அணிவகுப்புடன், மலர் மாலை அணிவிக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டு, தேசியக் கொடி, பாடசாலை கொடிகள் ஏற்றப்பட்டு மங்கள விளக்கேற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது.

தொடர்ந்து, அதிபர் அரவிந்தன் தலைமையில், தெரிவு செய்யப்பட்ட மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களில் இருந்து, சபாநாயகராக பிலிப்குமார் பிரவீன் தெரிவு செய்யப்பட்டதை தொடர்ந்து, சபாநாயகர் தலைமையில், அமர்வு இடம் பெற்றது.

அருள்ஞானமணி அருள்நிதேசன் பிரதமராக தெரிவு செய்யப்பட்டதுடன், ஏனைய அமைச்சர்களும் தெரிவு செய்யப்பட்டு, சபாநாயகரால் நியமன கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அதன் பின்னர், அமைச்சர்கள் தமது பிரேரணைகளை முன்வைத்ததுடன், அடுத்த அமர்வுக்கான திகதி தீர்மானிக்கப்பட்டு, இன்றைய அமர்வு நிறைவடைந்தது.

பிரதம விருந்தினராக, வடமராட்சி கல்வி வலய சமூக விஞ்ஞான பாட வளவாளரும், ஆசிரிய ஆலோசகருமான எஸ்.எம். கண்ணகுமார் பங்கேற்றார்.

இந்த நிகழ்வில், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்களை கட்டுப்படுத்தும் எண்ணம் எங்களுக்கு இல்லை!

## அமைச்சரவை பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 07

**ஊடகங்களை கட்டுப்படுத்துவதற்குரிய எந்தவொரு தேவைப்பாடும் அரசாங்கத்துக்கு கிடையாது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.**



அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், ஊடக நெறிமுறைகள், ஒழுங்கு விதிகளை பின்பற்றி தகவல்களை வெளியிட வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கு உள்ளது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# ரூ. 50 ஆயிரம் இலஞ்சம் வாங்கிய பிரதியமைச்சருக்கு கடூழிய சிறை!

கொழும்பு, நவ. 07

இலஞ்சம் பெற்ற குற்றத்துக்காக முன்னாள் பிரதி அமைச்சர் சாந்த பிரேமரத்னவுக்கு 4 வருடங்கள் கடூழிய சிறையை உறுதி செய்தது மேன்முறையீட்டு நீதிமன்றம்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சம்பத் அபயகோன், பி. குமரன் இரத்தினம் ஆகியோரின் ஆயம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தத் தீர்ப்பை உறுதி செய்தது.

2007ஆம் ஆண்டு சாந்த பிரேமரத்ன பிரதி அமைச்சராக இருந்தார். அப்போது, அவர் இலங்கை மின்சார சபையில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாக உறுதியளித்து பெண் ஒருவரிடம் 50 ஆயிரம் ரூபாயை இலஞ்சமாக பெற்றார். இந்த வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட அவருக்கு 2017ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றம் 4 ஆண்டுகள் கடூழியச் சிறை தண்டனையை விதித்தது.

இந்தத் தண்டனையிலிருந்து விலக்குப் பெற அவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு தொடர்ந்திருந்த நிலையிலேயே மேன்முறையீட்டு நீதிமன்றம் தண்டனையை நேற்று முன்தினம் உறுதி செய்தது. (ஐ)

# மின் கட்டணக் குறைப்பு போதுமானதாக இல்லை

கொழும்பு, நவ. 07

மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பில், இலங்கை மின்சார சபை முன்வைத்துள்ள கட்டணக் குறைப்பு வீதம் போதுமானதாக இல்லை என, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் பணிப்பாளர் ஜெயநாத் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதனால், மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பான புதிய பிரேரணையை சமர்ப்பிக்குமாறு, இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த பிரேரணையை, எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி, இலங்கை மின்சார சபை, மின்சார கட்டண திருத்தம் தொடர்பான யோசனையை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் சமர்ப்பித்தது.

அதில், மின் கட்டணத்தை, 4 முதல் 11 சத வீதம் வரை குறைக்க, இலங்கை மின்சார சபை முன்மொழிந்தது.

இந்த நிலையில், மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பில், மின்சார சபை முன்வைத்துள்ள கட்டணக் குறைப்பு வீதம் போதுமானதாக இல்லை என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஜெயநாத் ஹேரத், மின்சார சபைக்கு அறிவித்துள்ளார். (அ)

# வைபவங்கள், இசை நிகழ்ச்சிகளுக்கு காலிமுகத்திடலை பயன்படுத்த அனுமதி

கொழும்பு, நவ. 07

வைபவங்கள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் கொண்டாட்டங்களுக்கு காலி முகத்திடல் மைதானத்தை பயன்படுத்த, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

காலி முகத்திடல் மைதானத்தை நிர்வாக ரீதியாக மிகவும் முறைமை சார்ந்ததாகவும், வெளிப்படையாகவும் மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல்திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றபோதே அமைச்சரவைப் பேச்சாளர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காலி முகத்திடல் மைதானத்தின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக மாதாந்தம் ஏறத்தாழ 03 மில்லியன் ரூபாய் வரை செலவு செய்யப்படுகின்றது. குறித்த தொகையை ஈடு செய்வதற்காகவும், 2023ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்றவாறு, உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சுதந்திரமாக நடமாடக்கூடியதும், மக்களுக்குச் சுதந்திரமாகப் பயன்படுத்துவதற்கு இடமளிக்கும் நோக்கில் வைபவங்கள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் வேறு கொண்டாட்டங்களுக்குப் பொருத்தமான நிர்ணயங்களுக்கமைய காலி முகத்திடல் மைதானத்தை பயன்படுத்துவதற்கு வாய்ப்புகளை வழங்குவது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கிணங்க "தூய்மையானதும் பசுமையானதுமான காலி முகத்திடல்" எனும் எண்ணக்கருவுக்கு அமைய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (அ)

# நீரில் இழுத்து செல்லப்பட்ட வாகனம் பரிதாபமாக இரண்டு பேர் உயிரிழப்பு!

## தும்மோதர கால்வாயை கடக்க முற்பட்டபோது துயரம்

கொழும்பு, நவ. 07

கொஸ்கம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அஸ்வத்த வீதியில் தும்மோதர கால்வாயைக் கடக்க முற்பட்ட கப் ரக வாகனமொன்று நீரில் இழுத்துச் செல்லப்பட்டதில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது வாகனத்தில் நால்வர் பயணித்துள்ள நிலையில், சாரதி உட்பட இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் 27 மற்றும் 69 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்கம பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# போலிநாணயத்தாள் தயாரித்து கைதாகியவர் விளக்கமறியலில்!

கொழும்பு, நவ. 07

ஜனாதிபதியின் உருவப்படம் அடங்கிய 5,000 ரூபாய் நாணய தாளை போலியாகத் தயாரித்து, சமூக வலைளத்தங்களில் பதிவேற்றிய குற்றச்சாட்டில் கைதான நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கடுவலை நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தியபோது, அவரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கைதானவர் 38 வயதான கடுவலை - கொரதொட்ட பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உலகில் பெறுமதி வாய்ந்த கடவுச்சீட்டு வரிசையில் இலங்கை 94ஆவது இடம்!

கொழும்பு, நவ. 07

2024 ஒக்ரோபரில் வெளியிடப்பட்ட அண்மைய ஹென்லி கடவுச்சீட்டு குறியீட்டின் படி, சிங்கப்பூரின் கடவுச்சீட்டு உலகின் மிகவும் பெறுமதி வாய்ந்ததாக பெயரிடப்பட்டுள்ளது.

அதன் குடிமக்கள் சிங்கப்பூர் கடவுச்சீட்டை பயன்படுத்தி 195 நாடுகளுக்கு விசா இல்லாது பயணிக்கலாம்.

பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளின் கடவுச்சீட்டு இரண்டாவது இடத்தைப் பகிர்ந்து கொண்டது.

குறித்த நாடுகளின் கடவுச்சீட்டை கொண்ட மக்கள் 192 நாடுகளுக்கு விசா இல்லாத அணுகலை பெறலாம்.

அமெரிக்கா 8 ஆவது இடத்தைப் பிடித்தது, அதன் குடிமக்களுக்கு 186 நாடுகளுக்கு விசா இல்லாது பயணிக்கலாம்.

தரவரிசையில் இலங்கையின் கடவுச்சீட்டு 94 ஆவது இடத்தில் உள்ளது. இலங்கை கடவுச்சீட்டை பயன்படுத்தி பிரஜைகள் உலகின் 44 நாடுகளுக்கு விசா இல்லாத அணுகலைப் பெறலாம். (அ)

# மலையகத்தில் நாளை 249 வீடுகள் கையளிப்பு

கொழும்பு, நவ. 07

பெருந்தோட்ட மக்களுக்குரிய 249 வீடுகள் நாளை வெள்ளிக்கிழமை கையளிக்கப்படவுள்ளது. இதில் அரசியல்வாதிகள் பங்கேற்கமாட்டார்கள்.

அதிகாரிகள் அவற்றை கையளிப்பார்கள் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சரு-



மான விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

'காணி வழங்கல், காணி உரிமை வழங்கல் மற்றும் அஸ்வெசும வேலைத்திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்." - எனவும் அமைச்சர் கூறினார்.

# இறக்குமதி செய்யப்படும் சீனிக்கு வரி விதிப்பு நீடிப்பு

கொழும்பு, நவ. 07

இறக்குமதி செய்யப்படும் சீனி கிலோவொன்றுக்கான 50 ரூபாய் என்ற விசேட பண்ட வரி விதிப்பு அரசாங்கத்தினால் நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வருடம் ஒன்றிக்காக விதிக்கப்பட்டிருந்த விசேட பண்ட வரி கடந்த முதலாம் திகதியுடன் நிறைவடையவிருந்தநிலையில், அந்த வரி விதிப்பு நீடிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைமுறைச் சாத்தியத்தை உணர்ந்து வாக்களியுங்கள்

## முள்ளிவாய்க்காலில் டக்ளஸ்



முல்லைத்தீவு, நவ. 07

**நடைமுறை சாத்தியத்தை உணர்ந்து, சரியான திசை வழி நோக்கி பயணிப்பதன் ஊடாகவே எதிர்பார்ப்புக்களை வெற்றி கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ள செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, கடந்த காலத் தவறுகளிலிருந்து தமிழ் மக்கள் மீண்டெழுந்து நிகழ்காலத்தை சிறப்பானதாக உருவாக்கிக்கொள்ள ஈ.பி.டி.பியின் வீணைச் சின்னத்துக்கு வாக்களித்து தமிழ் மக்களின் அரசியல் பரப்பிலும் மாற்றத்தை கொண்டுவர அணி திரள வேண்டுமெனவும் அழைப்பு விடுத்துள்ளார்.**

வன்னி தேர்தல் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா முள்ளிவாய்க்கால் கிழக்கு கடற்கரைப் பகுதியில் பிரதேச மக்களினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தேர்தல் பரப்புரை கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதர தமிழர் அரசியல் தரப்பினர் எவருமே இதுவரை செய்திராத அபிவிருத்திகளையும் மக்களின் நலன் சார் திட்டங்களையும் இணக்க அரசியல் வழிமுறையின் ஊடாக கடந்த கலத்தில் நாம் சதித்துக் காட்டியுள்ளோம்.

இதேவேளை யுத்தத்தால் முழுமையாக அழிவுற்று இன்று படிப்படியாக மீண்டுவரும் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் சரியான அரசியல் பிரதிநிதித்துவத்தை இதுவரை காலமும் தேர்வு செய்ய தவறியமையால் தொடர்ந்தும் பல்வேறு அவலங்களையும் பொருளாதார நெருக்கடிகளையும் நாளாந்தம் எதிர்நோக்கிய வண்ணம் வாழும் நிலை காணப்படுகின்றது.

உங்கள் அரசியல் தெரிவுகள் தெளிவானதாகவும் மக்கள் நலன் சார்ந்து மக்களுடன் வாழும் தரப்பினராகவும் இருப்பது அவசியமானது.

இந்நிலையில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தருணம் ஒன்று மக்களாகிய உங்கள் கரங்களுக்கு மீண்டும் வந்துள்ளது. இந்த சந்தர்ப்பத்தை சரியானவர்களை நோக்கி நீங்கள் வழங்குவது அவசியமாகும். இதேநேரம் கிடைத்துள்ள இந்த சந்தரப்பத்தை தவறவிட்டால் அடுத்த 5 வருடங்களுக்கும் தவறை சொல்லிக்கொண்டு இதே நிலையில் தான் வாழ வேண்டிய நிலை ஏற்படும்.

அந்தவகையில் இம்முறை உங்கள் தெரிவுகள் தெளிவானதாகவும் எதிர்கால நோக்கம் கருதியதுமாக இருந்து அந்த மாற்றம் எமது ஈ.பி.டி.பி கட்சியின் பலத்தை வலுப்படுத்துவதாக இருக்குமானால் நீங்கள் எதிர்பார்க்கும் அன்றாடப் பிரச்னை, அபிவிருத்திமுதல் அரசியல் உரிமை பிரச்னைக்கான தீர்வுவரை அதனைத்தையும் என்னால் பெற்றுத்தர முடியும்-என்றார். (அ-05)



## ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் அலுவலகம் ஆலையடிவேம்பில் திறப்பு

அம்பாறை, நவ. 07

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி சார்பாக சங்கு சின்னத்தில் போட்டியிடும் முன்னாள் மாகாணசபை உறுப்பினரும், முன்னாள் நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளருமான சோமசுந்தரம் புஸ்பராசாவின் தேர்தல் அலுவலகம் ஆலையடிவேம்பில் நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டது.

இதில் ஆலையடிவேம்பு பாற்பண்ணையாளர்கள், பொது மக்கள், புத்திஜீவிகள், இளைஞர்கள் என ஆயிரக்கணக்கான வர்கள் கலந்துகொண்டு வேட்பாளர் புஸ்பராசாவுக்கு வரவேற்பையும் ஆதரவையும் வழங்கினர். (அ)

## பிரசாரத்தை ஆரம்பித்த ஐ.தே.க.



யாழ்ப்பாணம், நவ. 07

ஐக்கிய தேசியக் கட்சியினர் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர், யாழ்ப்பாணத்தில் தமது பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

இதன்போது யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் டேவிட் நவரட்னராஜ் கருத்து தெரிவிக்கையில்-

நவாலியூர் சோமசுந்தரம் புலவரின் பேரனான நான் யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்தில் போட்டியிடுகினறேன்.

நல்லூர் கந்தனை வழிபட்டு, கந்தனின் அருளாசியுடன் பிரசாரப் பணிகளை ஆரம்பித்துள்ளேன். எமக்கு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்கள் பெரும் ஆதரவு தந்து யானை சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும்-என்றார். (அ)

## தீர்வை நோக்கிய பயணத்துடன் அபிவிருத்தியே எங்கள் இலக்கு!

வவுனியா, நவ. 07

நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ள தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வை பெற்றுக்கொள்வதற்காக சாத்தியமான வழிமுறைகளை பின்பற்றி புதிய அரசாங்கத்துடன் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதுடன் சமாந்தரமாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் அன்றாட பிரச்சனைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுக்க பாடுபடுவேன் என வன்னி மாவட்ட தமிழரசுக் கட்சியின் முதன்மை வேட்பாளர் மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் மன்னார் மாவட்டத்தில் கிராமமொன்றிற்கு தேர்தல் பரப்புரைக்காக சென்றிருந்தேன். அங்கு முன்னாள் போராளி ஒருவர் என்னிடம் சங்கடமான கேள்வி ஒன்றைக் கேட்டார். நீங்கள் வெற்றி பெற்றால் தேசியத்துடன் இணைந்து பயணிப்பீர்களா அல்லது மத்திய அரசாங்கத்துடன் இணைந்து பயணிப்பீர்களா என்று. நான் அவருக்கு பதில் கூறினேன், இரண்டுடனும் இணைந்து பயணிப்பேன் என்று. தேசியம் என்பது எமது அரசியல் உரிமை அதனை பெறுவதற்காக தொடர்ந்தும் பாடுபடுவேன், அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை பிரச்னைகளை தீர்த்து வைப்பதற்கும், பிரதேசத்தின் அபிவிருத்தியைச் செய்வதற்கும் மத்திய அரசின் துறைசார்ந்த அமைச்சுக்களுடனும், சர்வதேச நிதிநிறுவனங்களுடனும், புலம்பெயர் அமைப்புகளுடனும் இணைந்து பணியாற்றுவேன்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை தீர்த்துவைப்பதற்காக இதயசுத்தியுடன் அரசாங்கத்துடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எமது கட்சி என்றுமே தயாராக உள்ளது. அமையவுள்ள புதிய அரசாங்கத்தின் அணுகுமுறையில் மாற்றமொன்று ஏற்பட்டால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்னையை தீர்த்துவைப்பது இலகுவான விடயமாகும். எனினும் அவர்களின் உண்மையான நிலைப்பாடு என்ன என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும் - என்றார். (அ)

## பிள்ளையானின் ஆதரவாளர்களினால் எமது கட்சி வேட்பாளர் மீது தாக்குதல்!

### இன்பராசா குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, நவ. 07

பிள்ளையானின் ஆதரவாளர்களினால் தமது வேட்பாளர் மற்றும் அவரது கணவன் தாக்கப்பட்டதாகவும் புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் க.இன்பராசா தெரிவித்தார்.

மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் கட்சியின் சார்பாக. யாழ் மாவட்டம், வன்னி மாவட்டம், திருகோணமலை மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டத்தில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

கடந்த 31 ஆம் திகதி இரவு இரவு மட்டக்களப்பு நொச்சிமுனை என்ற இடத்தில் எங்களது பெண் வேட்பாளர் தாக்கப்பட்டு இருக்கின்றார். அவரின் கணவரும் தாக்கப்பட்டுள்ளார். அவர்கள் இன்று வரை வைத்தியசாலையில் இருக்கின்றார்கள்.

தாக்கப்பட்டவர் முன்னாள் போராளி. தாக்கியவர்கள் நால்வரும் வீட்டுக்கு வந்து புனர்வாழ்வழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் கட்சிக்கு ஏன் ஆதரவு தெரிவிக்கவேண்டும் என்று திலீபன் சுவாசினியிடம் கேட்டுள்ளனர். அதனை தொடர்ந்து அது எங்களது விருப்பம் என கணவர் தெரிவித்திருக்கின்றார்.

இதன்போது கணவர் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. வெளியில் இழுத்துச்சென்று தாக்கியுள்ளனர். இது தொடர்பில் காத்தான்குடி பொலிஸில் முறையிட்டுள்ளனர்.

சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் தான் இந்த சம்பவம் நடந்தது. நிச்சயமாக இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பொத்துவில் அலுவலகம் திறந்துவைப்பு

அம்பாறை, நவ. 07

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் இராஜகுமார் பிரகாஷ்ஷின் பொத்துவில் பிரதேச தேர்தல் பிரச்சார அலுவலகம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது.

சங்கு சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் பிரகாஷ் அலுவலகத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார்.

விழாவில் முதன்மை வேட்பாளர் ச.நேசராசா உள்ளிட்ட வேட்பாளர்கள் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

அங்கு பிரசாரக் கூட்டம் இடம்பெற்றது. அவ் பகுதியில் வசிக்கும் அதிகளவான மக்கள் கலந்து கொண்டனர். வேட்பாளர் மக்களுக்கு தனது எதிர்கால நடவடிக்கை பற்றி தெளிவூட்டினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கு விநோதங்களை காட்டுகின்றார் ஜனாதிபதி!

## சாடுகின்றார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, நவ. 06

**திருடர்கள் உகண்டாவுக்கு கொண்டு சென்ற பணத்தை மீண்டும் நாட்டுக்கு கொண்டு வருவேன் எனக் கூறிய ஜனாதிபதி இன்று நாட்டுக்கு வினோதங்களை காட்டிக் கொண்டிருக்கிறார் என, ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

2024 பொதுத் தேர்தலை இலக்காக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் அவிசாவளை பிரதேச கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பொன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பில்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டிலிருந்து திருடப்பட்ட பணத்தையும், உகண்டாவில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணத்தையும் மீளப் பெற்று, மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்தில் அந்தப் பணத்தைப் பயன்படுத்தி, எமது நாடு எதிர்நோக்கும் பாரதூரமான பிரச்னைகளுக்கு தீர்வை தருவோம் என தற்போதைய ஜனாதிபதி உள்ளிட்ட ஆளும் தரப்பினர் கடந்த காலங்களில் கூறினர்.

மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்புகளை ஏற்படுத்தினர். உகாண்டாவுக்கு எடுத்துச் சென்ற பணம் திரும்பக் கொண்டுவர நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்பிக்கையோடு காத்துக் கொண்டிருக்கிறோம். திருடிய பணத்தை நாட்டுக்கு கொண்டு வந்து நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பார்கள் என கருதினாலும், ஜனாதிபதி தலைமையிலான ஜே.வி.பி அரசாங்கம் நாட்டுக்கு நகைச்சுவைகளை வழங்கி வருகிறது.

தேர்தல் மேடைகளில் கடவுச் சீட்டுக்கான வரிசைகளை நிறுத்துவோம் என்று வீராப்பு பேசினர். இன்னும் நிலையான தீர்வை வழங்கவில்லை. வரி குறைக்கப்படும், விலை சூத்திரங்கள் இல்லாதொழிக்கப்படும், உகண்டாவில் பதுக்கி வைத்துள்ள பணம் கொண்டு வரப்படும் என்று மேடைகளில் கூச்சலிட்டாலும், இறுதியில் ஜனாதிபதி தலைமையிலான ஜே.வி.பி அரசாங்கம் சர்வதேச நாணயத்திடம் மண்டியிட்டு எரிபொருள் விலை சூத்திரத்திற்கு அடிமையாகியுள்ளது.

மோசடி, ஊழல், திருட்டு போன்றவற்றால் எரிபொருள் விலை தீர்மானிக்கப்படுகிறது என்று குற்றச்சாட்டை முன்வைத்தவர்களே எரிபொருள் விலைச் சூத்திரத்தின் அடிமைகளாக மாறியுள்ளனர்-என்றார். (அ)

# அரசாங்கம் செய்த அனுபவம் தேசிய மக்கள் சக்திக்கில்லை

## சாகல ரத்நாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 07

தேசிய மக்கள் சக்திக்கு அரசியல் செய்து அனுபவம் இருக்கிறது. ஆனால் அரசாங்கம் செய்த அனுபவம் இல்லை. அதனால்தான் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தை அவர்கள் இன்னும் நாட்டுக்கு வெளிப்படுத்தாமல் இருக்கின்றனர். அவ்வாறான வேலைத்திட்டம் அவர்களிடம் இல்லை என புதிய ஜனநாயக முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் வழிநடத்தல் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்திக்கு அரசாங்கம் செய்த அனுபவம் இல்லை என்பது அவர்களின் கடந்த ஒரு மாத கால நடவடிக்கைகளில் இருந்து தெரிந்து கொள்ள முடியும். ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் இன்னும் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு விமர்சன அரசியல் செய்வது போன்றே தற்போது செயல்பட்டு வருகிது.

நாட்டை நிர்வகிக்கும் அவர்களுக்கு ஒரு முறையான வேலைத் திட்டம் இருக்க வேண்டும். நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு பயணப்பாதை இருக்க வேண்டும்.

ஆனால் இதுவரை அவர்கள் அவ்வாறான எந்த வேலைத்திட்டத்தையும் நாட்டுக்கு முன்வைத்ததில்லை. அவர்களிடம் அனுபவம் இல்லாமையே இதற்கு காரணமாகும்.

எமது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் வேலைத் திட்டம் காரணமாக படிப்படியாக அபிவிருத்தியடைந்து வந்தது. முறையான வேலைத்திட்டம் இருந்தமையாலே அவ்வாறு செய்ய முடிந்தது.

அரசாங்கத்தை கொண்டு செல்லும் எமது பயண வழியை நாங்கள் முன்வைத்திருந்தோம். அப்போது எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு எமது வேலைத் திட்டத்தை விமர்சித்தார்கள். ஆனால் அதற்கு மாற்று வழியை அவர்கள் முன்வைக்கவில்லை-என்றார். (அ)

# ஊழல்வாதிகள் இனியும் மக்களை ஏமாற்றி அரசியல் செய்யமுடியாது!

கொழும்பு, நவ. 07

ஊழல்வாதிகள் இனியும் நாட்டுமக்களை ஏமாற்றி அரசியலில் ஈடுபடமுடியாது. ஏன ஐக்கிய ஜனநாயகக்குரல் கட்சியின் தலைவர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்

புத்தளம் மாவட்டத்தில் இடம்பெற்ற மக்கள் பேரணியில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று பிரதான கட்சிகளின் கூட்டங்களில் கூட இந்தளவில் மக்கள் ஆதரவு வழங்கியதில்லை. நாம் ஊழலுக்கு எதிரானவர்கள் உண்மையை தயங்காமல் பேசுபவர்கள். எனவே மக்களுக்காக நாம் குரல் கொடுப்போம் என்பதில் மக்களுக்கு நம்பிக்கை உள்ளது. நாம் இனங்களுக்கிடையில் மதங்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்தி அரசியல் செய்பவர்கள் அல்லர். பொதுத்தேர்தலில் ஐக்கிய ஜனநாயகக் குரல் பெரும்பான்மை ஆசனங்களை வெற்றி கொள்ளும் என்பதில் எமக்கு நம்பிக்கை உள்ளது. கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் புத்தளம் மாவட்ட மக்களை ஏமாற்றி வந்தனர். ஆனால் இனியும் அந்த மக்களை அவர்களால் ஏமாற்றமுடியாது. ஊழல்வாதிகளையும் கொள்ளையர்களையும் மக்கள் அடையாள் கண்டுள்ளனர். ஊழல் மோசடியற்ற தூய அரசியலை முன்னெடுப்பதே எமது நோக்கமாகும்.-என்றார். (அ)

# சுகாதார பிரச்னைகள் தொடர்பில் வேட்பாளர்கள் அக்கறை இல்லை!

## ஐக்கிய மக்கள் கூட்டணி குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 07

சுகாதாரக்கட்டமைப்பில் காணப்படும் பிரச்னைகள் தொடர்பில் எந்த வேட்பாளர்களும் அவதானம் செலுத்தவில்லை என ஐக்கிய மக்கள் கூட்டணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் மாத்திரம் 50 ஆயிரத்திற்கும் அதிக நோயாளர்கள் இதய சத்திர சிகிச்சைக்காக பதிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த பட்டியலில் உள்ள அனைவருக்கும் சிகிச்சை நிறைவடைய 2030 ஆம் ஆண்டு வரை செல்லலாம். அந்தவகையில் நோக்கும்போது இதய நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 2030 வரை உயிருடன் இருப்பார்களா என்ற பாரிய சிக்கல் நிலையொன்று காணப்படுகின்றது.

அதேபோன்று 50 மருந்துகளுக்கு சுகாதாரக் கட்டமைப்புக்குள் தட்டுப்பாட்டு நிலையொன்று காணப்படுகின்றது. உரிய வைத்திய நிபுணர்களுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றது. இந்த விடயங்கள் தொடர்பில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவரும் கவனம் செலுத்தியதாக தெரியவில்லை. கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் என்ற ரீதியில் கொழும்பு மாவட்டத்தில் காணப்படும் சுகாதார கட்டமைப்பு பிரச்னைகளுக்கான தீர்வை பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே நாம் களமிறங்கியுள்ளோம்-என்றார். (அ)

# மார்ச், ஏப்ரலில் நாடு மீண்டும் நெருக்கடியை எதிர்கொள்ளும்



கொழும்பு, நவ. 07

பணம்அச்சிடப்படுவதால் மீண்டும் பண வீக்கம் அதிகரித்து பொருட்களின் விலைகளும் அதிகரிக்கவுள்ளன. மார்ச், ஏப்ரல் மாதங்களில் நாடு மீண்டும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும்.

வரிசை யுகம் உருவாகும். இதனை முன்னரே அறிந்ததால் தான் ஒன்றரை ஆண்டுகளில் முடியாவிட்டால் விட்டுச் செல்வதாக அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

களுத்துறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வங்குரோத்தடைந்த நாடொன்று மிகக் குறுகிய காலத்தில் அந்த நிலைமையிலிருந்து மீண்டிருக்கின்றது என்றால் அது இலங்கை மாத்திரமே.

அதற்குரிய பெருமை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது அரசாங்கத்தையே சேரும். எவ்வாறிருப்பினும் அதனை மக்கள் [illegible] விட்டனர்.

தற்போது யார் வேண்டுமானாலும் நாட்டை நிர்வகித்துச் செல்லலாம் என்று மக்கள் எண்ணுகின்றனர். ஆனால் அது தவறாகும். இதனை நாம் தேர்தலுக்கு முன்னரே கூறினோம்.

எனினும் 42 சதவீத மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் தற்போது ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்தை அந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.

செப்ரெம்பர் 19ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்துடன் கையெழுத்திடப்பட்ட இணக்கப்பாட்டு ஒப்பந்தம் அவ்வாறே கையெழுத்திடப்படுகிறது.-என்றார். (அ)

# பருவகாலப் பறவைகளை நம்பி நீங்கள் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இழக்காதீர்!



கொழும்பு, நவ. 07

"பருவகால பறவைகள்போல தேர்தல் காலங்களில் மாத்திரம் பெருந்தோட்டப்பகுதிகளுக்கு வரும் அரசியல்வாதிகள், சலுகைகளை வழங்கி வாக்குவேட்டை நடத்திவிடலாம் என கருதுகின்றனர். எமது மக்கள் சலுகைகளுக்கு விலைபோகின்றனவர்கள் அல்லர். உரிமைக்காகவே வாக்களிப்பார்கள்." - என்று புதிய ஜனநாயக முன்னணியின் கண்டி மாவட்ட வேட்பாளர் வேலுகுமார் தெரிவித்தார்.

கிறிஸ்மஸ் காலத்தில் கிறிஸ்மஸ் தாத்தா பரிசு பொதிகளை கொண்டுவருவதுபோல, தேர்தல் காலத்தில் சலுகைகளுடன் தோட்டப்பகுதிகளுக்கு வரும் அரசியல் வாதிகளுக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் எனவும் அவர் கூறினார்.

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றியபோதே வேலுகுமார் இவ்வாறு கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் மட்டக்களப்பில் 118 முறைப்பாடுகள்!

மட்டக்களப்பு, நவ. 07

**பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து நேற்று முன்தினம் மதியம் வரை மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் சட்டவிதிகளை மீறி செயல்பட்டமை தொடர்பாக இதுவரை 118 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேர்தல் முறைப்பாடுகளை பொறுப்பேற்கும் அலுவலகம் அறிவித்துள்ளது.**

இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள 118 முறைப்பாடுகளில் 84 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. மிகுதி 34 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் கூறப்பட்டது.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல், சட்டவிரோத சுவரொட்டிகள், பாதாதைகள் காட்சிப்படுத்தல், துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தல் போன்ற சட்டவிரோத செயற்பாடுகள் பதிவாகியுள்ளன. இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் தேர்தல் சட்டவிதி மீறல் அடிப்படையில் சாதாரண தரமுடையவை என தேர்தல் முறைப்பாடுகளை பொறுப்பேற்கும் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# திருகோணமலையில் நீர் விநியோகம் இன்று 16 மணிநேரம் தடைப்படும்!

திருகோணமலை, நவ. 07

திருகோணமலை மாவட்டத்தின் சில இடங்களில் இன்று வியாழக்கிழமை16 மணிநேர நீர் விநியோகம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 6 மணி முதல் இரவு 10 மணிவரை இந்த நீர் விநியோகம் தடைப்படும் என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் திருகோணமலை பிராந்திய முகாமையாளர் பொறியியலாளர் எல்.சுபாகரன் தெரிவித்துள்ளார்.

கந்தளாய், தம்பலகாமம், கிண்ணியா, பட்டினமும் சூழலும் ஆகிய பிரதேச செயலகப் பகுதியிலும் குச்சவெளி பிரதேச செயலக பகுதியின் இறக்கக்கண்டி பாலம் வரையான பகுதிகளில் தண்ணீர் விநியோகம் தடைப்படும்.

திருகோணமலை - கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அவசர திருத்தப் பணிகள் காரணமாகவே தண்ணீர் விநியோகம் தடைப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மருத்துவரின் மனைவி கத்தியால் குத்தி கொலை!

## மைத்துனரே சந்தேகநபர்

திருகோணமலை, நவ. 06

திருகோணமலையில் பிரபல தனியார் மருத்துவமனையின் உரிமையாளரின் மனைவி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்தார்பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் திருகோணமலை தனியார் மருத்துவமனை உரிமையாளரின் மனைவியான ஏஞ்சலி சுமேத்ரா (63வயது) எனவும் தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது வெளிநாட்டில் இருந்து நேற்று அதிகாலை வருகை தந்து மருத்துவமனை கட்டடத் தொகுதியில் உள்ள மூன்றாவது மாடியில் தனது அறையை திறப்பதற்காக சென்றபோது அறைக்கு பக்கத்தில் இருந்த மைத்துனரால் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டார் என்று முதல் கட்ட விசாரணைகளில் தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் கத்திக்குத்தை நடத்தினார் என்று கூறப்படும் மருத்துவமனையின் உரிமையாளரின் சகோதரரான 56 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டார் என்றும் திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கிழக்கின் முக்கிய சபைகளுக்கு புதிய தலைவர்கள் நியமனம்!

திருகோணமலை, நவ. 07

கிழக்கு மாகாண வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, சுற்றுலா பணியகம், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, சாலை மற்றும் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை, முன்பள்ளி கல்வி பணியகம் ஆகிய 5 அதிகார சபைகளுக்கு புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான நியமனக் கடிதங்களை கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர நேற்று முன்தினம் தனது பணிமனையில் வைத்து வழங்கினார்.

மாகாண வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தலைவராக ஜி.சுகுமாறன், மாகாண சுற்றுலா பணியக தலைவராக எம். ஜி. பிரியந்த மலவனகே, மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு தலைவராக திருமதி. ரஜினி கணேசபிள்ளை, மாகாண வீதி மற்றும் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தலைவராக கித்சிறி நவரத்ன, மாகாண முன்பள்ளி கல்வி பணியக தலைவராக அ. விஜயானந்தமூர்த்தி ஆகியோர் நியமிக்கப்பட்டு அவர்களுக்கான நியமன கடிதங்களை ஆளுநர் வழங்கிவைத்தார். (ஐ)



# கந்தபுராண அமிர்தம் நூல் வெளியீட்டு விழா



காரைதீவு, நவ. 07

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலய முன்னாள் வண்ணக்கர் கலாபூஷணம் தம்பிமுத்து மகேந்திரா எழுதிய "கந்த புராண அமிர்தம்" என்ற நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

ஆலய பிரதம குரு சிவசிறீ சண்முக மகேஸ்வர குருக்கள் மற்றும் ஆலய குரு சிவ சிறீ அங்குசநாதக் குருக்கள் ஆகியோருக்கு முதல் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பின்னர், ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் மற்றும் வண்ணக்கர் வன்னியசிங்கம் ஜயந்தன் ஆகியோருக்கு பிரதிகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து, எழுத்தாளர் மகேந்திராவுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர்.

# கிழக்கை சேர்ந்த எண்மருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது!

திருகோணமலை, நவ. 07

கிழக்கில் நான்கு வருடங்களுக்கான வாழ்நாள் சாதனையாளர்களாக விருது பெறும் எட்டு பெருங் கலைஞர்களின் பெயர் விவரங்கள் நேற்று வெளியிடப்பட்டன.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் இந்த விவரங்களை வெளியிட்டார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2024ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ள இலக்கிய விழாவில் "வாழ்நாள் சாதனையாளர்" விருது பின்வரும் கலையிலக்கிய ஆளுமைகளுக்கு வழங்கப்படுகின்றது.

2021ஆம் ஆண்டு - மேனாள் மோராசிரியர். சி.மௌனகுரு - மட்டக்களப்பு.

2022ஆம் ஆண்டு - மேனாள் பேராசிரியர். எம். ஏ. நுஃமான் - அம்பாறை, "கேணிப்பித்தன்" ச. அருளானந்தம் - திருகோணமலை.

2023ஆம் ஆண்டு - டி. டபிள்யூ. உபநந்த வெலிக்கல - திருகோணமலை, "தாமரைத் தீவான்". சோ. இராசேந்திரம் - திருகோணமலை, "மக்கத்தார்" ஏ.மஜீத் - அம்பாறை.


2024ம் ஆண்டு - எஸ்எல்எம். ஹனிபா - மட்டக்களப்பு, "வெல்லவூர்கோபால்" சீ. கோபாலசிங்கம் - மட்டக்களப்பு. (ஐ)

# ஆலங்குளம் துயிலும் இல்லத்தில் சிரமதானம்!

சம்பூர், நவ. 07

திருகோணமலையின் சம்பூர் ஆலங்குளம் துயிலுமில்லத்தில் சிரமதானப்பணிகள் நடைபெற்றன.

நேற்று முன்தினம் இங்கு சிரமதானப் பணிகள் ஆரம்பமாகின. சிரமதான பணிகளை ஆரம்பிக்க முன்னர், உயிர்நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.



இந்த சிரமதான நிகழ்வில் பொதுமக்கள் பலர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுடைய ஆட்சி பொற்காலமாகும்!

## தேர்தலில் வென்ற ட்ரம்ப் தெரிவிப்பு





வாஷிங்டன், நவ. 07

**இந்த முறை என்னுடைய ஆட்சி அமெரிக்காவின் பொற்காலமாக அமையப்போகிறது - என்று அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**

47ஆவது ஜனாதிபதியாக பதவியேற்க முன்னர் ட்ரம்ப் தனது ஆதரவாளர்கள் முன்னிலையில் உரையாற்றினார்.

அமெரிக்காவில் புதிய வரலாறு படைக்கப்பட்டுள்ளது. குடியரசு கட்சியின் வெற்றிக்காக வாக்களித்த ஒவ்வோர் அமெரிக்கருக்கும் எனது நன்றி. வெற்றிக்கு உறுதுணையாக இருந்த என் மனைவிக்கு நன்றி. இக்கட்டான சூழலில் எனக்கு துணையாக இருந்த குடும்பத்தினருக்கு நன்றி. இந்த முறை என்னுடைய ஆட்சி அமெரிக்காவின் பொற்காலமாக அமையப் போகிறது. 47ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்த அமெரிக்க மக்களுக்கு நன்றி.

இதுவரை யாரும் காணாத வகையில் ஓர் இயக்கத்தை நடத்தி வெற்றி வாகை சூடியுள்ளோம். அமெரிக்காவை மீண்டும் மகத்தான நாடாக மாற்றுவேன். அமெரிக்க மக்கள் மகிழ்ச்சி மற்றும் பெருமைப்படும் வகையில் ஆட்சி நடத்துவேன். அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள அனைத்து பிரச்னைகளுக்கும் உரிய தீர்வு காணப்படும். முன்னெப்போதும் இல்லாத வகையில் வெற்றி கிடைத்துள்ளது. என் மீது நம்பிக்கை அளித்து வாக்களித்த மக்களின் நம்பிக்கை வீண்போகாது - என்றார். (ஐ)

## வரலாற்றின் சிறந்த மீள்வருகை!

### ட்ரம்புக்கு இஸ்ரேல் பிரதமர் வாழ்த்து

டெல்அவிவ், நவ. 07

வரலாற்றின் மிகச்சிறந்த மீள்வருகை என்று டொனால்ட் ட்ரம்புக்கு இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.


அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்புக்கு உலக தலைவர்கள் பலரும் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

இஸ்ரேல் பிரதமர் விடுத்த வாழ்த்துச் செய்தியில்,

"வெள்ளை மாளிகைக்கான உங்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தமீள்வருகை அமெரிக்காவுக்கு ஒரு புதிய ஆரம்பத்தையும் இஸ்ரேல் - அமெரிக்கா இடையிலான மாபெரும் கூட்டணிக்கு ஒரு சக்திவாய்ந்த மறு உறுதியையும் வழங்குகின்றது - என்று கூறியுள்ளார். (ஐ)

## எலான் குடியரசின் புதிய நட்சத்திரம்!

### டொனால்ட் ட்ரம்ப் புகழாரம்




வாஷிங்டன், நவ. 07

எலான் மஸ்கை குடியரசுக் கட்சியின் புதிய நட்சத்திரம் என்று டொனால்ட் ட்ரம்ப் புகழ்ந்துள்ளார்.

அமெரிக்காவில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் 47 ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவர் ஆதரவாளர்கள் மத்தியில் ஆற்றிய உரையில் உலகின் மிகப்பெரிய கோடீஸ்வரர்களில் ஒருவரும், எக்ஸ் சமூகவலைதளத்தின் உரிமையாளருமான எலான் மஸ்க்கை குடியரசு கட்சியின் "புதிய நட்சத்திரம்" என வர்ணித்துள்ளார்.

அத்தோடு, அவர் ஒரு "அற்புதமான" பையன் என்றும் ட்ரம்ப் வர்ணித்துள்ளார். (ஐ)

## இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரை அதிரடியாக நீக்கினார் பிரதமர்!



டெல் அவிவ், நவ. 07

இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கெல்லன்டை பதவி நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளார். அந்நாட்டுப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு. அவரின் செயல்பாடுகள் மீது நம்பிக்கை இல்லாததால் பதவி நீக்கம் செய்வதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நெதன்யாகு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "கடந்த சில மாதங்களில் நம்பிக்கை இழந்துவிட்டேன். இதனால் தற்போதைய பாதுகாப்புத் துறை அமைச்சரை அந்தப் பதவியில் இருந்து நீக்க முடிவு செய்துள்ளேன்", என்று கூறப்பட்டுள்ளது. இது இஸ்ரேல் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஒக்ரோபர் 7இல் ஹமாஸ் இஸ்ரேலுக்குள் நடத்திய தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் காசா மீது படையெடுப்பு நடத்தியது. ஒரு வருடம் கடந்துள்ள காசா போரில் 43 ஆயிரத்து 300இற்கும் மேற்பட்ட பாஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். காசாவுக்கு ஆதரவாக லெபனானின் ஹிஸ்புல்லாக்கள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் அங்கும் படையெடுத்தது. இந்தத் தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3 ஆயிரத்தை கடந்துள்ளது.

காசா, லெபனான் என இரு முனைகளில் இஸ்ரேல் இராணுவம் போர் நடத்தி வரும் சூழலில் பாதுகாப்பு அமைச்சரை பிரதமர் பதவி நீக்கம் செய்துள்ளமை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், யோவ் கெல்லன்டுக்கு பதிலாக தற்போது வெளியுறவுத் துறை அமைச்சராக உள்ள இஸ்ரல் காட்ஸ் பாதுகாப்புத் துறை அமைச்சராகப் பதவியேற்பார் என்று தெரிகிறது. கிடியோன் சார் என்பவர் இஸ்ரேல் நாட்டின் புதிய வெளியுறவுத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

## இஸ்ரேல் படைகள் தாக்குதல் காசாவில் 30 பலஸ்தீனர் பலி!



காசா, நவ. 07


இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் காசாவில் குறைந்தது 30 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என்று பாலஸ்தீன ஊடகங்களும் மருத்துவர்களும் தெரிவித்துள்ளனர்.

காசாவில் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக நேற்று முன்தினம் முதல் இஸ்ரேலிய இராணுவம் புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், காசா முழுவதும் இஸ்ரேல் நேற்று முன்தினம் இரவு முதல் நடத்திய தொடர் தாக்குதல்களில் குறைந்தது 30 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என்று பாலஸ்தீனிய ஊடகங்களும் மருத்துவர்களும் நேற்று தெரிவித்தனர்.

இதனிடையே, காசாவின் பெய்ட் லாஹியா பகுதி மீது இஸ்ரேலிய விமானங்கள் துண்டுப் பிரசுரங்களை வீசின. அதில், பெய்ட் லாஹியா பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் தங்குமிடங்களை விட்டு வெளியேறாத பொதுமக்கள், உடனடியாக நகரத்தை விட்டு வெளியேறுமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. "வீடுகளிலும் தங்குமிடங்களிலும் தங்கியிருபோர் அனைவரும், தங்கள் உயிரைப் பணயம் வைப்பதாகவே அர்த்தம். உங்கள் பாதுகாப்பிற்காக, நீங்கள் தெற்கு நோக்கிச் செல்ல வேண்டும்" என்று அரபு மொழியில் எழுதப்பட்ட துண்டுப் பிரசுரம் கூறுகிறது.

காசாவில் ஒரு வருடத்திற்கும் மேலாக நடந்த போரில் 43,300இற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என்று காசா அதிகாரிகள் கூறுகின்றனர். (ஐ)

## சூரிய ஒளிவட்டத்தை ஆராய ஏவூர்தியை ஏவுகிறது இந்தியா!



புதுடில்லி, நவ. 07

சூரிய ஒளிவட்டத்தை ஆய்வு செய்ய ஐரோப்பிய யூனியனின் புரோபா-3 விண்கலத்தை பி. எஸ். எல். வி. -எக்ஸ். எல். ஏவூர்தி மூலம் சிறீஹரிகோட்டாவில் இருந்து இஸ்ரோ அடுத்த மாதம் விண்ணுக்கு அனுப்புகிறது என மத்திய இணையமைச்சர் ஜித்தேந்திர சிங் தெரிவித்தார்.

சூரியனின் ஒளிவட்டம் பற்றிய ஆய்வில் ஐரோப்பிய விஞ்ஞானிகளுடன், இஸ்ரோ விஞ்ஞானிகளும் ஈடுபடவுள்ளனர். இதற்காக ஐரோப்பிய யூனியனின் புரோபா-3 விண்கலம் இஸ்ரோ பி. எஸ். எல். வி. -எக்ஸ். எல். ஏவூர்தி மூலம் அடுத்த மாதம் விண்ணுக்கு அனுப்புகிறது.

இந்த புரோபா-3 விண்கலத்தில் இரண்டு செயற்கைக்கோள்கள் இருக்கும். இவை ஒன்றாக இணைந்து செயல்படும். 144 மீற்றர் நீளமுள்ள இந்த சாதனம் சோலர் கார்னோகிராப் என அழைக்கப்படும். இது சூரியனின் கரோனா என்ற பிரகாசமான ஒளிவட்ட பகுதியை ஆய்வு செய்ய உதவும்.

சூரியனை துல்லியமாக ஆய்வு செய்வதற்காக உலகில் முதல் முறையாக மேற்கொள்ளப்படும். இந்த ஆய்வில், சூரியனின் ஒளிவட்டப் பகுதி விரிவாக ஆய்வு செய்யப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேசிய பிரச்னைகளின் தீர்வுக்கு -

# அரசாங்கத்துக்கும் ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் இடையில் கூட்டுச் செயல்பாடு அவசியம்!



- கலாநிதி ஜெகான் பெரேரா

நாட்டை அடிமைப்படுத்தி வைத்தி ருக்கும் ஊழலுக்கு முடிவுகட்ட வேண் டும் என்பதே ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் முக்கியமான வாக்குறுதிகளில் ஒன்றாக இருந்தது. அந்த கட்சி மீது மக்களுக்கு பெரும் கவர்ச்சி ஏற்படுவதற்கும் அதுவே பிர தான காரணமாகவும் இருந்தது. உயர் மட்டத்தில் இருந்து அடிமட்டம் வரை தலைவிரித்தாடும் ஊழல் 1970 களின் பிற்பகுதியில் திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டதை தொடர்ந்து அரசாங்கத்துறையையும் தனியார்துறை யையும் தழுவியதாக வழமையானதாக் கப்பட்டுவிட்டது.

பாரிய அபிவிருத்தி திட்டங்களும் வெளிநாட்டு உதவிகளும் அதிகாரப் பதவிநிலைகளில் இருந்தவர்கள் ஊழலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை வழங்கின. 2022 பொருளாதார வீழ்ச்சியும் அதன் விளைவாக மக்கள் அனுபவிக்கவேண்டி வந்த இடர்பாடுகளும் ஊழலை ஒழிக்க வேண்டும் என்றும் அதில் சம்பந்தப்பட்டவர்களை அகற்றவேண்டும் என்றும் உறுதிப்பாட்டை இறுக்கமாக்கியது. அரசியல் அதிகாரத்தை ஒருபோதும் கொண்டிராத கட்சி என்ற வகையில் தேசிய மக்கள் சக்தியே (முன்னணி கட்சிகள் மத்தியில்) ஊழல் குற்றச்சாட்டில் இருந்து விடுபட்டதாக இருந்தது.

ஊழலினாலும் முறைகேடுகளினால் சீரழிந்துகிடக்கும் நாட்டை துப்புரவு செய்ய வேண்டும் என்ற வேட்கை ஆட்சிமுறை தொடர்பில் மக்களுக்கு இருந்த அக்கறையின் மைய விவகாரமாக இருந்தது. வேறு எந்த பிரச்சினையினாலும் அதை மறைப்புச் செய்ய முடியவில்லை. இனத்துவ தேசியவா தத்தை கிளறிவிடுவதற்கு சில எதிர்க் கட்சிகள் மேற்கொண்ட பிரயத்தனம் மக்கள் மத்தியில் எடுபடவில்லை. தேசிய மக்கள் சக்தியை தவிர, தங்கள் மத்தியில் ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளானவர்களைக் கொண்ட எந்தவொரு பிரதான அரசியல் கட்சியினாலும் ஊழல் பிரச்சினையை கையாள்வதற்கான அரசியல் துணிவாற்றல் தங்களுக்கு இருப்பதாக வாக்காளர்களை நம்பச்செய்ய முடிய வில்லை.

அதனால், அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரிப்பது, வாழ்க்கைச் செலவைக் குறைப்பது போன்ற வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தவறியிருப்பதாக எதிர்க்கட்சிகளினால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களோ அல்லது அவற்றின் வாதங்களோ வாக்காளர்கள் மத்தியில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. ஊழலை ஒழிக்க வேண்டும் என்பதும் ஊழலுக்கு உடந்தையாக இருந்தவர்களை அகற்ற வேண்டும் என்பதுமே வாக்காளர்களின் பிரதான அபிலாசையாக இருக்கிறது.

முன்னைய அரசாங்கத்தின் இரு முக்கிய உறுப்பினர்கள் கைதுசெய் யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருப்பதை அடுத்து ஊழலையும் அதனுடன் இணைந்த தண்டனை யின்மையையும் கையாளுவதில் அரசாங்கம் அக்கறையுடன் இருக்கிறது என்ற திருப்தி தற்போதைக்கு வாக்காளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

பதிவு செய்யப்படாத ஆடம்பர வாகனம் ஒன்று தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட் டவர்களில் ஒருவர் வன்முறை நடத்தை வரலாற்றைக் கொண்டவர். ஆனால், அவர் முன்னர் ஒருபோதும் கைது செய்யப்பட்டதில்லை. அவரின் குடும் பம் காலத்துக்கு முன்னரான உயர் குடி தொடர்புகளை கொண்டவர் என்பதும் சமூகத்தின் ஒரு பிரிவினரின் வாக்குகளை பெற்றுத்தரக் கூடிய ஆற்றல் கொண்டவர் என்று கருதப்பட்டதாலும் அவர் கைது செய்யப்படாமல் இருந்திருக்கலாம்.

ஆனால், தற்போதைய அரசாங்கம் அவரையும் பாராளுமன்றத்தில் வன்முறையில் ஈடுபட்ட முன்னைய அரசாங்கத்தின் இன்னொரு உறுப்பினரையும் பதிவு செய்யப்படாத வாகனங்களை வைத்திருந்த ஒப்பீட்டளவில் சிறிய குற்றச்சாட்டு தொடர்பில் இப்போது கைது செய்திருக்கிறது. இதை இவர் களின் பல சகாக்கள் மோசடி செய்ததாக கூறப்படும் கோடிக் கணக்கான பணத்துடன் ஒப்பிட முடியாது. ஆனால், இது ஒரு தொடக்கம்.

பிரதான பிரச்சினை அதனால், பிரதான பிரச்சினையான ஊழலை தாமதமின்றி கையாளத் தொடங்கி முன்னைய அரசாங்கத்தின் முக்கிய புள்ளிகளில் சிலருக்கு எதிராக நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருப் பதால் அது வாக்குறுதிகளை நிறைவேற் றுவதில் உண் மையில் அக்கறையுடன் இருப்பதாக மக்கள் கருதுகிறார்கள். முன்னைய அரசாங்கத்தின் இரு உறுப்பி னர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மறுதலிப்பது கஷ்டம். ஏனென்றால் சான்றுகள் (பதிவுசெய்யப்படாத இரு மோட்டார் வாகனங்கள்) கைவசம் இருக்கின்றன.

அரசாங்கம் தானாகவே அரசியலமைப்புக்கு திருத்தங்களைச் செய்யும் செயன்முறைகளில் ஈடுபடுவதற்கு வசதியாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களை பாராளுமன்றத்தில் கைப்பற்றுவது சாத்தியமில்லை என்பதே இந்த ஆய்வில் இருந்து பெறக்கூடிய முடிவாகும். அதற்கு சாதாரண பெரும்பான்மை ஒன்று கிடைக்கலாம். ஆனால் அதுவும் நிச்சயமானதல்ல.

கோடிக்கணக்கான பணமோசடி சம்பந்தப்பட்ட சிக்கலான வழக்குகளில் சான்றுகளைப் பெறுவது கஷ்டம். முன்னைய அரசாங்கங்களினால் கடந்த காலத்தில் நீதிமன்றங்களுக்கு கொண்டு வரப்பட்ட ஊழல் வழக்குகளில் பல தடவைகள் இடம்பெற்றதைப் போன்று அந்த சிக்கலான வழக்குகள் நீண்ட சட்ட நடைமுறைகளுக்கு உள்ளாகி இறுதியில் குற்றஞ்சாட்டப்படுபவர்கள் விடுதலையாகி விடவும் கூடும். ஆனால், தற்போதைய வழக்குகள் நேரடியானவை சிக்கலற்றவை என்பதால் அவற்றில் சம்பந்தப் பட்டவர்கள் குற்றவாளிகளாகக் காணப் படக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

அதன் விளைவாக, இன்றைய தருணத்தில் அரசாங்கத்தின் மீதான எதிர்க் கட்சிகளின் விமர்சனங்கள் மக்கள் மத்தியில் எடுபடப் போவதில்லை. குறிப்பாக, முன்னைய அரசாங்கத்தினால் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன் படிக்கையை இன்றைய அரசாங்கம் கையாளுகின்ற முறை தொடர்பான விமர்சனங்களைப் பொறுத்தவரையில் நிலைமை இதுவே. அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரிப்பதாகவும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதாகவும் ஜனாதிபதி தேர்தலின்போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்பது இன்னொரு விமர்சனம்.

ஆனால், தங்களது பொருளாதார இடர்பாடுகள் சாத்தியமானளவு விரைவாக தணிக்கப்பட வேண்டும் என்று மக்கள் விரும்புவார்கள் என்கிற அதே வேளை, புதிய அரசாங்கம் ஒரு மாத காலத்துக்கு முன்னர்தான் பதவிக்கு வந்தது என்பதையும் குறைந்த முன்னுரிமை கொண்ட துறைகளில் இருந்து உயர்ந்த முன்னுரிமை கொண்ட துறைக ளுக்கு வளங்களை மாற்றிப்பகிர்வதற்கு புதிய வரவு - செலவு திட்டம் ஒன்றை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது என்ப தையும் அவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். வரிக் கட்டமைப்புகளில் மாற்றங்களைச் செய்வதற்கு சட்டங்க ளில் மாற்றம் செயயவேண்டும். பாராளுமன்றம் கலைக்கப் பட்டிருக்கும் நிலையில் அது இந்த நேரத்தில் சாத்திய மில்லை.

அத்துடன், ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியினால் வழங்கப் பட்ட வாக்குறுதிகளை அதன் போட்டிக் கட்சிகள் வழங்கிய வாக்குறுதிகளின் பின்புலத்தில் நோக்கவேண்டியதும் அவசியமாகும்.

நம்பமுடியாத நிவாரணப் பொதிகள் அவற்றில் அடங்கும். சமூகத்தின் மிகவும் நலிவுற்ற குழுக்களுக்கு மாதாந்தம் நலன்புரி கொடுப்பனவு வழங்குவதாகவும் கடன்நிவாரணத் திட்டங்கள் அறிமுகம், மாற்றுத் திறனாளிகளுக்கும் மிகவும் வறுமைப்பட்டவர்களுக்கு கொடுப்பனவுகள் அதிகரிப்பு, விவசாயிகளுக்கு கடன் ரத்து, வரிக்குறைப்பு, இலட்சக் கணக்கில் தொழில் வாய்ப்புகளை உரு வாக்குதல், சகல தரப்பினருக்கும் சம்பள அதிகரிப்பு, பெருமளவு வெளிநாட்டு முதலீடுகளைப் பெறுதல் அல்லது குறுகிய கால வரையறைக்குள் கடன் நிவாரணங்களைப் பெறுதல் என்று பெரு வாரியான வாக்குறுதிகளை அந்த கட்சி கள் வழங்கின. கடனை திருப்பிச் செலுத்துவதில் இலங்கையின் ஆற்றல் குறித்த தற்போதைய மதிப்பீடு மற்றும் சர்வதேச உறவுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இந்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றுவது சாத்திய மில்லை. அதனால் அரசாங்கம் வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றவில்லை என்று எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டுவது பாசாங்கத்தனமானதாகும்.

சாத்தியமான பங்காளிகள் அறகலய போராட்ட இயக்கத்தினால் "முறைமை மாற்றம்" என்று சுருங்கச் சொல்லப்பட்ட ஊழல் நிறைந்த ஆட்சி முறையை முற்று முழுவதுமாக மாற்றவேண்டும் என்ற மக்களின் வேட்கை பாராளுமன்ற தேர்தலிலும் மக்களின் கவனத்தை பெரிதும் ஈர்க்கக்கூடிய பிரசாரத் தொனிப்பொருளாக தொடர்ந்து விளங்கப்போகிறது. ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்காளிக்காதவர்களும் கூட ஊழலற்ற ஆட்சிமுறையை விரும்புவதால் இந்த தடவை அந்த கட்சிக்கு வாக்களிக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

மறுபுறத்தில், கடந்த மாதம் எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலில் கண்டதைப் போன்று மக்கள் தங்களுக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர்களுக்கு அல்லது தங்களுக்கு உதவியவர்களுக்கு உணர்ச்சி பூர்வமாக வாக்களிக்கவும் நாட்டம் காட்டலாம். அது உள்ளூர் மட்டத்தில் சலுகைகளைச் செய்திருக்கக்கூடிய முன்னைய அரசாங்க உறுப்பினர்களுக்கு அனுகூலமாக அமையும். எல்பிட்டிய பிரதேச சபையில் 47 சதவீதமான வாக் குகளைக் கைப்பற்றிய தேசிய மக்கள் சக்தி அரைவாசி ஆசனங்களைப் பெற் றது. ஆனால், கூடுதல் சதவீதமான வாக்குகளை ஏனைய கட்சிகளே பெற்றன.

நாட்டில் இன, மத சிறுபான்மைச் சமூகங்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளில் காணப்படும் நிலைவரங்களும் தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மை ஆசனங்களை பெறுவதை சிக்கலாக்கும். தேசிய மக்கள் சக்தி முன்னர் பெரும்பான்மையினச் சமூகத் தின் மீதே பிரதானமாகக் கவனத்தைக் குவித்தது. அதன் உயர்மட்டத் தலைவர்களும் அந்த இன, மதப் பின்னணியில் இருந்து வந்தவர்களே. அதனால் இன, மத சிறுபான்மைச் சமூகங்ளைப் பொறுத் தரை, தங்கள் மத்தியில் வேலை செய் யாத ஒரு தேசியக் கட்சியை விடவும் தங்களது பிரிவுசார்ந்த நலன்களுக்காக குரல் கொடுக்கின்ற கட்சிகளுக்கே வாக்களிப்பதில் இயல்பாகவே நாட்டம் காட்டுவார்கள்.

ஆனால், சிறுபான்மைச் சமூகங்கள் தங்களது சொந்த அரசியல் தலைவர்கள் மீதும் விரக்தியடைந்திருக்கின்ன. குறிப்பாக அந்த சமூகங்களின் இளம் தலைமுறையினர் பிரிந்து வாழ்வதை விடவும் பிரதான சமூகத்துடனும் தேசிய பொருளாதாரத்துடனும் இணைந்து வாழ்வதில் முன்னரை விடவும் இப்போது கூடுதல் அக்கறை காட்டுகிறார்கள்.

அரசாங்கம் தானாகவே அரசியலமைப்புக்கு திருத்தங்களைச் செய்யும் செயன்முறைகளில் ஈடுபடுவதற்கு வசதியாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களை பாராளுமன்றத்தில் கைப்பற்றுவது சாத்தியமில்லை என்பதே இந்த ஆய்வில் இருந்து பெறக்கூடிய முடிவாகும். அதற்கு சாதாரண பெரும்பான்மை ஒன்று கிடைக்கலாம். ஆனால் அதுவும் நிச்சயமானதல்ல. அதனால் பாராளுமன்றத்துக்கு தெரிவாகக்கூடிய கூட்டாகச் செயற்பட்டு சட்டங்களையும் அரசியலமைப்புத் திருத்தங்களையும் நிறைவேற்ற வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு ஏற்படுமானால் அதுவே நாட்டுக்கு நல்ல வாய்ப்பாக அமையும்.

அதற்கு முன்னாள் ஜனாதிபதிரணசிக்க பிரேமதாச கூறியதைப் போன்று எதிர்க்கட்சிகளுடன் கலந்தாலோசனை, விட்டுக்கொடுப்பு, கருத்தொருமிப்பு அவசியமாகும். ஊழலும் தண்டனையின்மையும் கோலோச்சிய கடந்த காலத்தைப் போலன்றி ஊழலை முடிவு கட்டுவதற்கு தேவையான சட்டங்களைக் கொண்டு வருவதற்கு அரசாங்கத்துடன் ஒத்துழைத்துச் செயற்படுவது எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரை ஒரு அமிலப் பரீட்சையாகும். தேசிய மக்கள் சக்தி அதன் பங்காளிகளாக வரக்கூடியவர்களை இன, மத சிறுபான்மை கட்சிகளில் தேடிக் கொள்ளக்கூடியது சாத்தியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமஷ்டி...

நடைபெற்றது.

இதில், பங்கேற்ற செய்தியாளர் ஒருவர், சமஷ்டி அரசமைப்பை ஏற்படுத்தவும் ஐ. நா. தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியுடன் அரசாங்கம் பேச்சு நடத்தியதாக உதய கம்மன்பில கூறியுள்ளமை தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பேச்சாளர், "சமஷ்டி அரசமைப்பையோ அல்லது ஐ. நா. தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவோ எமது ஆட்சியில் இடமில்லை. அத்துடன், ஆட்சியமைப்பது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியுடன் பேச்சு எதனையும் நடத்தவுமில்லை", என்றும் கூறினார். (ஐ)

## தோல்...

நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

சருமத்தில் ஏதேனும் நோய் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக மருத்துவரை நாடுவது அவசியமாகும். சருமத்தின் நிறத்தில் திடீரென மாற்றங்கள் ஏற்பட்டால் கிறீம் வகைளை பூசாமல் மருத்துவர் ஒருவரின் ஆலோசனையை பெறவேண்டும்.

சருமத்துக்கு நன்மை அளிக்கும் பல்வேறு காய்கறிகள் மற்றும் பழங்கள் எமது நாட்டில் உள்ளன. எனவே அவற்றைத் தினமும் சாப்பிடுங்கள். திடீரென உடல் எடை அதிகரித்தால் மருத்துவரிடம் ஆலோசனை பெற்று ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளுங்கள்.

தோலில் அரிப்பு, நிற மாற்றம், வெடிப்பு மற்றும் ஒவ்வாமை போன்ற நோய் அறிகுறிகள் ஏற்பட்டால் அலட்சியமாக இருக்காமல் உடனடியாக மருத்துவரை நாடுங்கள்.

பல்வேறு கிறீம் வகைகளை சருமத்தில் பயன்படுத்துவதாலும் தோல் புற்று நோய் ஏற்படலாம். எனவே, மருத்துவரின் ஆலோசனை இன்றி சந்தையில் விற்பனையாகும் புதிய கிறீம் வகைகளைப் பயன்படுத்த வேண்டாம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## பயங்கரவாத...

என்றும் மற்றவர் பூந்தோட்டத்தை சேர்ந்தவராவார்.

2019ஆம் ஆண்டு கைதான மூவருக்கும் எதிராக பொலிஸ் விசாரணையின் அடிப்படையில் பீ அறிக்கை தயார் செய்யப்பட்டு வவுனியா நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பில் நீதிமன்றில் விசாரணைகள் நடந்து வந்த நிலையில் சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

குறித்த எதிரிகளுக்கு எதிராக நீதிவான் நீதிமன்றில் விசாரணைகள் நிறைவுற்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகள் பெறப்பட்டு 1996 ஆண்டின் 18 ஆம் இலக்க தீங்குவிளைவிக்கும் ஆயுத சட்டம் 2(1)ஆ பிரிவின் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக எதிரிகளான மூவருக்கும் எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச தரப்பு வழக்கு தொடுநரால் சந்தேகத்துக்கு அப்பால் இறை ஒப்புச்சாட்சியங்கள் எம்பிக்க தவறியமையால் சட்டவிதிகள் வழக்கத்தில் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மேல் நீதிமன்றில் இது தொடர்பான வழக்கு விசாரணைகள் தொடர்ச்சியாக நடைபெற்ற நிலையில் நேற்றைய தினம் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

குறித்த வழக்கில் இரசாயன பகுப்பாய்வு அறிக்கை தவிர்ந்து எவ்விதமான ஒப்புதல் சான்றிதழ்களும் வழக்கு தொடுநரால் (சட்டமா அதிபர் திணைக்களம்) சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கத் தவறியுள்ளதாகவும் அரச தரப்பின் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் தவறு இழைக்கப்படவில்லை என்ற அடிப்படையில் பிரிவு 134இன் சான்று கட்டளை சட்டத்தின் பிரகாரம் எதிரிகளான மூவரையும் விடுதலை செய்வதாக நீதிபதி மா. இளஞ்செழியன் தீர்ப்பு வழங்கினார். (ஐ)

## ட்ரம்புக்கு...

"அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட டொனால்ட் ஜே. டிரம்புக்கு மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவிக்கிறேன். இலங்கை மற்றும் அமெரிக்க மக்களுக்கு நன்மை பயக்கும் எமக்கிடையிலான உறவிலுள்ள பொதுவான இலக்குகளை அடைவதற்கு உங்களுடன் இணைந்து பணியாற்ற நான் எதிர்பார்க்கிறேன்", என்றுள்ளது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் கருஜெய சூரிய உள்ளிட்ட தலைவர்களும் ட்ரம்புக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர். (ஐ)

## தபால் மூல...

வாக்களிப்பு நடைபெற்றது.

இந்த நாட்களில் வாக்களிக்க முடியாதவர்கள் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் வாக்களிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி, இன்று நாளையும் மாவட்ட செயலகங்களிலும் தேர்தல் பணிமனைகளிலும் தபால் மூல வாக்காளர்கள் தமது வாக்கை செலுத்த முடியும்.

இந்த முறை பாராளுமன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 7 இலட்சத்து 38 ஆயிரத்து 50 பேர் தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஒற்றையாட்சி...

பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க புதிய அரசமைப்பை கொண்டு வருவதாக அறிவித்துள்ளார். இந்த அரசமைப்பில் 2015 இல் அமைந்த நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற மைத்திரிபால சிறிசேன - ரணில் கொண்டுவந்த இடைக்கால அறிக்கையை கொண்டு வரும் திட்டம் இருப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

அந்தத் திட்டம் மிகத் தெளிவாக இந்த அரசமைப்பானது ஒற்றையாட்சி என்பதை குறிப்பிடுகின்றது. 2017முதல் நாங்கள் தெளிவாக மக்களுக்கு சொல்லி வருகின்றோம். வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தி 18 பாராளுமன்ற உறுப்பினர்கள் அதில் 16பேர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள். 16பேரும் இடைக்கால அரசமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள்.

ஒற்றையாட்சி முறைமையை 2015 இல் இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரித்திருப்பது என்பது எமது இனத்துக்கான சாபக்கேடு. 2015 இல் இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மீண்டும் இந்த பாராளுமன்றிலும் தெரிவு செய்யப்படுவார்களானால், அறுதிப் பெரும்பான்மையுடன் - தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் அரசமைப்பு நிறைவேற்றப்பட்டதாக ஜனாதிபதி காட்டிக்கொள்வார்.

தமிழர் அரசியலை ஒற்றையாட்சிக்குள் முடக்கும் செயல்பாட்டுக்கு - அரசமைப்பில் சமஷ்டி இல்லை என்பதை மக்கள் மத்தியில் மூடி மறைப்பதற்கு அந்தக் கட்சி சொல்கிறது "பெயர் பலகை முக்கியம் இல்லை - உள்ளடக்கம்தான் தேவை", என்று. இப்படி சொல்பவர்கள் சாதாரண ஆட்கள் இல்லை ஜனாதிபதி சட்டத்தரணி என்று சொல்பவர்களே இதனை சொல்கின்றனர்.

தமிழ் அரசுக் கட்சியினர் இந்த அரசமைப்பை தாம்தான் தயாரித்தனர் என்று ஒப்புக்கொள்கிறார்கள். இந்த வரலாற்று துரோகத்தை செய்தவர்களில் சம்பந்தன், சுமந்திரன், சித்தார்த்தன், சிறிதரன் ஆகியோரே. இவர்கள் முழுப் பேரும் மக்களால் நிராகரிக்கப்படவேண்டும். வடக்கு, கிழக்கில் மக்கள் அறுதிப் பெரும்பான்மையை எமக்கு வழங்கி - குறைந்தது எம்மில் 10 பேரையாவது பாராளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் - என்றார். (ஐ)

### இலஞ்ச குற்றச்சாட்டு:

# அதிகாரிகள் நால்வருக்கு 35 வருடங்கள் கடூழியசிறை!

கொழும்பு, நவ. 07

12.5 கோடி ரூபாயை இலஞ்சமாக பெற்ற சுங்கத் திணைக்களத்தின் முன்னாள் அதிகாரிகள் நால்வருக்கு 35 வருடங்கள் கடூழிய சிறை தண்டனையும் தலா 12.5 கோடி ரூபாய் அபராதமும் நேற்று விதித்தது கொழும்பு மேல் நீதிமன்றம்.

கடந்த 2015ஆம் ஆண்டு இலங்கை போக்குவரத்து சபைக்கு வழங்குவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட பேருந்து உதிரி பாகங்களை விடுவிப்பதற்காக கொழும்பு - பஞ்சிகாவத்தையை சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம் 12.5 கோடி ரூபாயை நால்வரும் பெற்றனர்.

இது தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் நடைபெற்று வந்த நிலையில் நேற்றைய தினம் குற்றவாளிகளாகக் காணப்பட்ட நால்வருக்கும் 35 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனையும் தலா 12. 5 கோடி ரூபாய் அபராதமும் விதித்தார் திபதி நாமல் பலல்லே.

# தமிழ் அரசு கட்சிக்கான ஆதரவு வடக்கில் வீழ்ச்சி!

### உதய கம்மன்பில சொல்கிறார்

கொழும்பு, நவ. 07

வடக்கில் தமது கட்சிக்கான ஆதரவு வீழ்ச்சியடைந்து வருவதால் அரசாங்கத்துடன் இணைந்து அதனைத் தக்கவைத்துக் கொள்வதற்கான தேவைப்பாடு இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு ஏற்பட்டுள்ளது என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

"மங்கள சமரவீரவுக்கும் சுமந்திரனுக்கும் நல்லுறவு இருந்தது. மங்கள ஜனாதிபதி ஆகியிருந்தால் சுமந்திரன் நிச்சயம் அமைச்சு பதவியை ஏற்றிருப்பார். இன்று மங்கள உயிருடன் இல்லை.

அடுத்தது சுமந்திரனுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் இடையில் சிறந்த நட்பு உள்ளது. இருவரும் இணைந்து செயல்படக்கூடியவர்கள். 1960 காலத்துக்கு பின்னர் அவர்கள் (தமிழ் அரசு கட்சி) அரசாங்கத்தில் அங்கம் வகிக்காததால் வடக்கில் அவர்களுக்கான வாக்கு வங்கி வீழ்ச்சியடைந்து வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 2015 இல் 16 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. 2020இல் அந்த எண்ணிக்கை 10 ஆகக் குறைந்தது. எனவே, அவர்களின் இருப்பு வீழ்ச்சியடைந்து வருகின்றது. எனவே, அரசாங்க பலம்மூலம் அதனை தக்கவைத்து கொள்வதற்கான தேவைப்பாடு அவர்களுக்கு உள்ளது." - என்றார். (ஐ)

## சந்திரிகாவின் பாதுகாப்பு குறைக்கப்படவேயில்லை!

கொழும்பு, நவ. 07

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்குரிய பாதுகாப்பு குறைக்கப்படவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

தனக்கான பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது என சந்திரிகா தெரிவித்துள்ள கருத்து தொடர்பில் எழுப் பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இந்த தகவலை வெளியிட்டார்.

அவருக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது, அதில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## 50கோடி...

உள்ளார்.

கடந்த செப்ரெம்பர் 30ஆம் திகதி மன்னாரில் நடந்த ஊடக சந்திப்பொன்றில் "அங்கஜனின் தந்தையின் பெயரிலும் ஒரு மதுபானசாலைக்கான கடிதம் வழங்கப்பட்டமைக்கான அத்தாட்சிக் கடிதம்கூட வெளிவந்துள்ளது", என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருந்தார் என்றும் இதன் ஊடாக தனது பெயருக்கும் தனது மகனின் பெயருக்கும் களங்கம் ஏற்படுத்தியுள்ளாரெனத் தனது சட்டத்தரணி ஊடாக சுமந்திரனிடம் 50 கோடி ரூபாய் இழப்பீடு கேட்டு சதாசிவம் இராமநாதன் கடிதம் அனுப்பியுள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் நடந்த தேர்தல் பரப்புரை கூட்டம் ஒன்றில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரான சட்டத்தரணி க. சுகாஷ் தெரிவித்த கருத்து தொடர்பிலும் இழப்பீடு கேட்டு, தனது சட்டத்தரணி ஊடாக கடிதம் அனுப்பவுள்ளார் என்றும் இராமநாதன் கூறியுள்ளார். (ஐ)

## அமெரிக்க...

வெற்றிபெற எலெக்டோரல் கொலேஜ் எனப்படும் வாக்காளர் குழுவின் ஆதரவு 270 தேவை. இதில், 279ஐ ட்ரம்பும் 223ஐ கமலா ஹாரிஸும் பெற்றுள்ளனர்.

இதன்படி, குடியரசு கட்சியின் டொனால்ட் ட்ரம்ப் 51 சதவீத வாக்குகளையும் கமலா ஹாரிஸ் 47.4 சதவீத வாக்குகளையும் பெற்றனர்.

அமெரிக்க வரலாற்றில் முதல் தேர்தலில் வெற்றி பெற்று இரண்டாவது தேர்தலில் தோல்வியடைந்து மூன்றாவது முறை தேர்தலில் வெற்றி பெற்ற ஒரே ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மட்டுமே ஆவார்.

2020ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த டொனால்ட் ட்ரம்ப் தேர்தல் முடிவுகளை ஏற்க மறுத்தார். இதைத் தொடர்ந்து கடந்த 2021 ஜனவரி 6ஆம் திகதி தலைநகர் வாஷிங்டனில் கலவரத்தை தூண்டினார் என்ற குற்றச்சாட்டும் அவர் மீது உள்ளது. 4 குற்றவியல் குற்றச்சாட்டுகளுடன் ஜனாதிபதியாகும் முதல் நபரும் ட்ரம்பே என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன், டொனால்ட் 2 படுகொலை முயற்சிகளிலிருந்தும் தப்பினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றதன் மூலம் குடியரசு கட்சியின் கொள்கையின்படி அந்த நாடு ஐ. நா. மனித உரிமைகள் பேரவையிலிருந்து விலகும். இதனால், இலங்கைமீதான 51/1 தீர்மானத்தில் அமெரிக்காவின் அழுத்தம் இல்லாமல் போக வாய்ப்புள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான விவகாரத்தில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளில் ஒன்றாக அமெரிக்காவும் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

(தொடர்புடைய செய்திகள் பக்கம் 9இல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# பயங்கரவாதச் சட்டம் குறித்து புதிய அரசில்தான் தீர்மானம்!

## அறிவித்தார் அமைச்சர் விஜித ஹேரத்

கொழும்பு, நவ. 07

**பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படுவது தொடர்பாக புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னரே நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.**

அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடும் அமைச்சரவை சந்திப்பில் கருத்து தெரிவித்த அமைச்சர் விஜித்த ஹேரத் இதனைக் கூறியுள்ளார்.

தற்போது நாடாளுமன்றம் ஒன்று இல்லை. எனவே பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது அல்லது திருத்துவது குறித்த நடவடிக்கைகளை எடுக்க முடியாது.

இந்தச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் இருக்கிறது.

எனினும் இந்த விடயத்தில் புதிய பாராளுமன்றம் கூட்டப்படும் போது உரிய தீர்மானம் எடுக்கப்படும் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். (அ)



## முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவரமாட்டோம்!

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, நவ. 07

முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவரப் போவதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவர எதிர்பார்க்கவில்லை. அவ்வாறான தொரு தேவையும் அரசாங்கத்துக்குக் கிடையாது. முஸ்லிம் மதத் தலைவர்கள், அமைப்புகளின் பிரதானிகள் ஆகியோருடன் கலந்துரையாடியே தேவை ஏற்படின் சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவரலாம். அதே போல, பௌத்த மதம் தொடர்பிலும் சட்டதிருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியிருப்பின் மதத் தலைவர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்போம். விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் இதுவரை காலமும் நடைமுறையில் உள்ள முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவர வில்லை. எதிர்காலத்திலும் கொண்டுவரமாட்டோம் என்பதை பொறுப்புடன் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.

# சீருடைத் துணியை விநியோகிப்பதற்கான சீன அரசின் நன்கொடையை ஏற்க அனுமதி

கொழும்பு, நவ. 07

2025 ஆம் ஆண்டுக்கான அனைத்து பாடசாலைகள் மற்றும் பிரிவினாக்களில் கல்வி பயில்கின்ற மாணவர்களுக்கு சீருடைத் துணியை விநியோகிப்பதற்கான சீன அரசின் நன்கொடையைப் பொறுப்பேற்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றபோதே அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் இதனைக் குறிப்பிட்டார்.

குறித்த துணித் தொகைக்குரியவாறு கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ள மாதிரிகளுக்கமைய, இலங்கை நெசவு மற்றும் ஆடைக் கைத்தொழில் நிறுவகத்தின் மூலமாக பரிசீலிக்கப்பட்ட பின்னர், குறித்த சீருடைத் துணிகள் பாடசாலை மாணவர்களின் பயன்பாட்டுக்கு பொருத்தமானதென விதந்துரைக்கப்பட்டுள்ளது. (அ)






## சீன அரசின் நிதியுதவியில் 1,996 வீடுகள் நிர்மாணம்

கொழும்பு, நவ. 07

குறைந்த வருமானம் கொண்ட நபர்களுக்கு சீன அரசின் நிதியுதவி வேலைத்திட்டத்தின் கீழ் 1,996 வீட்டு அலகுகளை நிர்மாணிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள் ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக் கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றபோதே அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் இதனைக் குறிப்பிட்டார்.

1,996 வீட்டு அலகுகளை நிர்மாணித்து, 03 தொகுதியின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சீன அரசால் பெயர் குறித்துள்ள விலைமனுதாரர்கள் 08 பேரிடம் விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளன.

குறித்த விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் அமைச்சரவை யால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் விதந்துரைகளுக்கு ஒப்பந்தங்களை வழங்குவதற்காக கிராமிய, நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் கட்டுமானங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)






## பேக்கரி உற்பத்திகள் விலை உயர வாய்ப்பு

கொழும்பு, நவ. 07

புதிய அரசாங்கம் கோதுமை மா, பட்டர் போன்றவற்றின் விலை களை குறைக்க நடவடிக்கை எடுக்காவிட்டால், வரும் பண்டிகைக் காலத்தில் கேக் உள்ளிட்ட பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலை அதிகரிக்கலாம் என பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 190 முதல் 195 ரூபா வரை உயர்ந்துள்ளதாகவும், பட்டர், முட்டை போன்றவையும் அதிக விலையில் இருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக ஒரு கிலோ பட்டர் கேக்கின் விலை 1000 முதல் 1200 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

வரும் பண்டிகைக் காலத்தில் முட்டை விலை மேலும் அதிகரிக்கும் பட்சத்தில் கேக் விலையும் அதிகரிக்கப்படும் என பேக்கரி உரிமையாளர்கள் வலியுறுத்துகின்றனர். (அ)






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org